# தென்மொழி

## தூயதமிழ் எழுதாத
## இதழ்களைப் பொசுக்குங்கள்!

ஆங்கிலத்தில் வடமொழியில் பிழையொன்று வரக்கண்டால்
அதைப்பொறுக்காப் பார்ப்பனர்தாம் அவர்நடத்தும்
தீங்கான தாள்களிலும் கதைகளிலும் தமிழ்க்கொலையை
நாள்தோறும் விடாப்பிடியாய்ச் செய்கின்றார்கள்!
ஈங்கிந்தத் தமிழர்களும் எதற்காகத் தாய்மொழியைத்
தாம்நடத்தும் இதழ்களிலே இழிவுசெய்வார்?
தூங்காதீர் தமிழர்களே! மொழியிழிவே இனஇழிவாம்!
முதன்முதலில் இதழ்ப்புரட்சி தொடங்குவீரே!

ஏயதமிழ் வளர்க்கின்ற மாணவரீர்! ஆசிரியப்
பெருமாண்பீர்! எந்தமிழ்த்தாய் தந்தையர்க்கே
சேயவர்தாம் நீவிரெனின் இதழ்களிலே தமிழ்நலத்தைச்
சிதைக்கின்ற சிறுமையினைப் பொறுக்கலாமோ?
தூயதமிழ் எழுதாத இதழொன்று தமிழகத்தின்
கடைகளிலே எழில்கொழிக்கத் தொங்குமாயின்
போயதனைப் பறித்தெடுத்துக் கிழித்தொருங்கே புலங்குவித்துப்
புடைசூழ்ந்து தீமூட்டிப் பொசுக்கு வீர்!




சுவடி: 12. ஓலை: 2. விலை: ஓர் உருபா.

# நமக்கு வந்த மடல்கள்.

**0: 413:** அன்புள்ள ஐயா! தங்களின் கீழ்நாட்டுச் செலவு இனிதே முடிந்து திரும்பியமை குறித்து யாம் மகிழ்கின்றோம். மேலை நாட்டுக்கும் செலவிருப்பதை எண்ணிப் பெருமிதம் கொள்கின்றோம். என்னில் தமிழ்ப்பற்றையும், தமிழினப்பற்றையும் வளர்த்த பெருமை தங்களுக்கே உரியது. உங்கள் எண்ணம் செயல் எல்லாமே என்னைக் கவர்ந்தது. கவர்ந்தது என்பதனால் ஐயப்பாடுடையதன்று. முற்றும் மெய்வழிச் செல்வனவும் அதனால் பிறரை நல்வழிப்படுத்துவன வுமாகும், அவை!

—வி. சோசப்பு பிரான்சிசு அறி.இ., ஆலங்குளம்,

**0: 414:** 1967-ஆம் ஆண்டுத் தொடங்கி இன்று வரை தென் மொழித் தூய்மைக்காக மட்டுமே தொடர்ந்து வாங்கிப் படித்து வருபவன் யான். கிடக்க. சுவடி 11. ஓலை 12 தென்மொழியிதழின் ஆசிரியவுரைபற்றி இக்கடிதம் வரைகின்றேன். எல்லாச் சமயங் களின் எல்லா வேர்களையும் ஆட்டியசைத்துப் பிடுங்கவோ, அதைக் கொண்டு மூடுமந்திரஞ் செய்து 'இறைத் தொண்டாற்றவோ' ஏற்ற சமையமிதுவன்று; இத்தகைய ஆராய்ச்சிகளை மூட்டைகட்டி மூலையில் போடுங்கள். மாந்த இனம் முழுமையையும் இன்றுவரை மீளவியலாத, மூட அறியாமைத் துயிலிலாழ்த்தி வரும் இவ்விறை, தெய்வ உணர்ச்சிகளைத் தமிழர்தம் நெஞ்சங்களினின்றும் தூர்த்தழிக்க உதவாவிடினும், அத்தூய்மைப் பணிக்குத் தடையாய் இருக்காதீர். செய்தக்க வல்ல செயக்கெடுமன்றோ? மேலும், இறைவன் பருப்பொரு ளாகவோ, மெய்ப்பொருளாகவோ எப்படியோ இருந்து எக்கேடு கெட்டும் போகட்டும்; நீர் அவனுக்கு முட்டுக் கொடுத்துத் தாங்கித் தூக்கிப் பிடிக்கத் தென்மொழியைத் தொடாதீர். அனைத்தையும் இணைத்துப் பிணைத்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருப்பவனை நீர் உள்ளத்தளவில் வழிபட்டுத் தொலையும். இனியும் தென்மொழியின் பக்கங்களைப் பாழாக்காதீர். இறைக் கருத்துகளைச் சுமந்துவரும் தென்மொழியிதழை வாங்கிய பின் தரக்குறைவான போலியை உயர்ந்ததென்று கருதி வாங்கியது போன்றதோர் ஏமாற்ற உணர்வே ஏற்படுகின்றது. அத்தகைய தென்மொழியிதழைத் தொடவே உள்ளம் நாணுகின்றது. கவைக்குதவா இறைக் கருத்து களைச் சுமப்பதினின்றும் தென்மொழிக்கு விடுதலை அளித்து, தனித் தமிழ் மொழி, இன, நாட்டு விடுதலைப் புரட்சிக்குத் தமிழர்களை ஈர்த்து வழிகாட்டியழைத்துச் செல்லும் ஆற்றல்களில் ஒன்றாக மட்டும் தென்மொழியைத் திகழ விடுங்கள். ஏழைசொல் அம்பலம் ஏறுமா?

—மு. மருதாசலம், கோவை-4.

**0: 415:** நான் தென்மொழியின் அடிமை! என்னைப்போல் எம் ஊரில் பலர் உளர். எங்கள் ஊரில் பார்ப்பனர்களின் கொடுமை ஓரளவே இருந்தாலும் மறைந்தபாடில்லை. இவர்களை அறவே ஒழிக்காமல் அக்கொடுமைகள் ஒழியா. தாங்கள் சின்னாட்களுக்கு முன் எம் ஊருக்கு வருகை தந்தது எங்களுடைய பேருகும். நீங்கள் வந்தது பலபேருடைய ஆரிய அடிமைத்தனங்கள் அகல வகை

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம் பார்க்க).

"கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழா தோளெழுந்தால்
எஞ்சுவதிலலை உலகில்
எவரும் எதிர்நின்றே!




தென்மொழி
இலக்கிய இதழ்

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

சுவடி: 12, ஓலை: 2.

நளி.-சிலை தி. பி. 2005.-(நவ.-திச.-1974.).

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்,

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.


## நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

# தி. மு. க. அமைச்சர்களுக்கு ஓர் எச்சரிக்கை!



இப்படியொரு கட்டுரை எழுதுவதற்குக் காரணியமாக இருந்ததே, கடந்த நான்கைந்து மாதங்களாகத் தமிழகத்தில் நான் செய்து வரும் சுற்றுச் செலவுதான். சிங்கையிலிருந்து திரும்பிய பின்னர் ஏறத்தாழ ஐம்பது அறுபது ஊர்களுக்குப் போயிருப்பேன். எங்காகிலும் ஒரு

நகரத்திற்கோ ஒரு சிற்றூர்க்கோ ஏற்பாடாகியுள்ள கூட்டத்திற்காகப் புறப்பட்டேன் என்றால், இடையிலுள்ள ஊர்களிலெல்லாம் இறங்கி, அங்கு ஓரிரண்டு மணி நேரத்தையாகிலும் கழித்துவிட்டுப் போவது என் வழக்கம். சில நேரங்களில் நேரடியாகப் போய் நேரடியாகத் திரும்பி விடுவேன் என்றாலும், பல வேளைகளில் இடையில் உள்ள ஊர்களில் இறங்காமலோ அங்கங்குக் தென்படும்-எனக்குத் தொடர் பற்ற-என்னைத் தெரியாத-பொது மக்களில் ஒரு சிலரைக் கண்டு பேச்சுக் கொடுத்துப் பொதுவான சில விளக்கங்களைத் தெரிந்து கொள்ளாமலோ நான் திரும்புவதில்லை. அவ்வாறான வகையில் நான் கேட்டறிந்த செய்திகளையும் உய்த்துணர்ந்த கருத்துகளையும் வைத்துக் கொண்டு நெடுநாட்களாக உள்ளம் புழுங்கிக் கொண்டிருந் தேன். இனிமேலும் பொறுத்துக் கொள்ள முடியாமல்-உள்ளத்தின் அழுத்தம் தாளாமல் போன ஒரு நிலையில்தான், அவற்றை வெளிப் படுத்தலாம் என்று எண்ணி இதனை எழுதலுற்றேன். சில செய்திகளைப் பொதுவான முறையில் எல்லாருக்கும் தெரியும்படி சொல்லிவிடக் கூடாது என்பதை நான் நன்கு அறிவேன். ஆனாலும், சில நேரங்களில் சில சிறப்புச் செய்திகளையே பொதுவாகக் கருத வேண்டிய சூழலோ, அவ்வகையில் பயன் கருதிய ஒரு நிலையோ ஏற்பட்டு விடுவதுண்டு. அதனால் நாம் எதிர்பார்க்காத சில தனி விளைவுகளும் உருவாவ துண்டு. அப்படிப்பட்ட ஓர் உள்விளைவு நிலையினைக் கருதியே இக் கருத்துகளை இவ்வளவு வெளிப்படையாக எடுத்து எழுதலானேன். இவற்றைப் படிக்கின்ற பலருக்கு இக்கருத்துகள் தெரியாமலிருக்க வழியில்லை; இவை புதியவையும் அல்ல! ஆனாலும் அவற்றை அவர்கள் துணிந்து வெளியே சொல்லத்தான் தயங்கிக் கொண்டிருந்திருப் பார்கள்; அல்லது மென்று விழுங்கியிருப்பார்கள்! நானும் அவ்வாறு-தான் இதுநாள் வரை இருந்தேன். இருந்தாலும் எதற்கும் ஓர் அளவுண்டு. அளவுக்கு மீறிய நிலையில்-நாம் வெளிப்படுத்த வேண்டிய ஒரு நிலை ஏற்படும் முன்பு, தாமாகவே வெளிப்பட்டு விடுவதுமுண்டு. அவ்வாறான நிலைதான் இது. எனவே இக்கருத்துகளுக்குத் தொடர் பான அன்பர்கள், இவற்றை வெளிப்படுத்திய வகையில் என்னை நொந்து கொள்ளாமல், இருக்கின்ற நிலைகளுக்காகத் தங்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து நிறுத்திக் கொள்ளும்படியும், அவ்வகை யில் தீர எண்ணி, மேற்கொண்டு செய்ய விருப்பனபற்றித் தெளிவான ஒரு வழியைப் பின்பற்ற முயற்சி செய்யும்படியும் கேட்டுக் கொள் கின்றேன்.

நமக்கு அரசியல் ஈடுபாடோ, பட்டம் பதவிகளோ என்றும் நிலை யானவையல்ல; கட்சியமைப்புங்கூட அப்படித்தான். ஆனால் நாம் நிலையானவர்களாக இருத்தல் வேண்டும்; நம் கருத்துகளும் செயற்

பாடுகளும் நிலையானவையாக இருத்தல் வேண்டும். எனவே அரசியலுக்காகவோ, பட்டம் பதவிகளுக்காகவோ-ஏன்-கட்சியமைப்புக்காகவோ கூட-நம்மை என்றும் தாழ்த்திக் கொள்ளுதல் கூடாது; நம் கருத்துகளை நெரித்துக் கொள்ளுதல் கூடாது. அவை என்றென்றும் நிலையாக நிற்க வேண்டுபவை; என்றென்றும் நம்மை அடையாளங் காட்டிக் கொண்டிருப்பவை. இதனை முதற்கண் அரசியல் ஈடுபாடுடைய ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

"இட்லர் என்பவன் ஒருவன் இருந்தான்; அவன் ஒரு காலத்தில் இவ்வுலகையே நடுநடுங்க வைத்தான்; பின் காலம் மாறியது; அவன் செய்த கொடுமைகளுக்காக இன்றைக்கு இவ்வுலகமே அவனைப் பழித்துத் தூற்றுகின்றது" என்று வரலாறு படிக்கின்றோம். இதில் இட்லரின் அரசியல் தந்திர மந்திரங்கள் நிற்கவில்லை; இட்லர் கொண்ட வெற்றி தோல்விகள் நிற்கவில்லை; அவன் மூளை வெப்பத்தின் ஆற்றல் நிற்கவில்லை; இறுதியில் அவன் மட்டுந்தான் நிற்கின்றான், அவன் இவ்வுலகுக்குச் செய்த பழிமட்டுந்தான் எச்சமாக நிற்கிறது; "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" —என்னும் வள்ளுவர் குறளுக்குப் பொருள் இதுதான். ஒரு கட்சியின் எச்சம் என்று கூட அவர் சொல்லவில்லை. 'அவரவர்' எச்சம் என்று ஆளைத் தனிப்படுத்திப் பேசுவதன் உட்கருத்தைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். மார்க்சுடன் ஒரு கூட்டமே இருந்தது; இன்று அந்தக் கூட்டத்தைப் பற்றி மக்களுக்குத் தெரியாது; தெரிய வேண்டிய தேவையில்லை; மார்க்சுதான் தெரியும்; அவனைத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவைதான் அவர்களுக்கு உண்டு. அதுவும் அவன் கருத்துககாகத்தான்; அவன் கருத்துகளின் மேல்தான் அவன் உருவம் நிற்கிறது; சந்தி சதுக்கங்களில் அன்று. அதேபோல் இலெனினிடம் ஒரு கட்சியிருந்தது; இன்று அந்தக் கட்சியைப்பற்றி உலகுக்குக் கவலையில்லை இலெனினைப் பற்றித்தான் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்! அதுவும் அவன் கருத்துகளுக்காகத்தான்! இவையெல்லாம் கடந்த காலங்கள் நமக்கு எச்சங்களாக விட்டுச் சென்ற பாடங்கள்! இப்பாடங்கள் எல்லாவற்றையும் படித்தவர்கள் தாம், நம் தலைவர்கள். இன்னும் இவற்றைவிடக் கூட அவர்களுக்குத் தெரியும். ஆனால் அவற்றை அவர்கள் தெரிந்து கொண்டதற்கான அடிச்சுவடுகளே அவர்களின் போக்குகளில் தென்படவில்லையே-ஏன்? ஒரு வேளை அந்தப் பாடங்களின் பிற்பகுதிகளை அவர்கள் விரும்பவில்லையா? கொழுமையான — வளமான - இட்லர், முசோலினிகளின் — முற்பகுதி வரலாறுகளே அவர்களுக்குப் போதுமா? மார்க்சு தன் இறுதிக்காலம் வரை வறுமைத் தீயில்தான் காய்ந்தான்! தன் மண்ணில் கூட தன்

சடலத்தைப் போடாமல் அயல் மண்ணில் போய்க் கிடத்தினான். அதற்காக அவனை உலகம் பழிக்கவில்லையே! வீடற்றவன் என்று ஏசவில்லையே! தகுதியுள்ள ஒருவனுக்கு உள்ள தகுதியற்ற நிலைகள் கூட, அவனுடைய தகுதி நிலைகளாகவே மதிக்கப் பெறும் என்பதை மார்க்சு வரலாறு நமக்குக் காட்டவில்லையா? வைப்பகங்களில் குவிந்து கிடக்கின்ற பணமும், தெருத் தெருவாகக் கட்டிவிடப் பெற்ற வீடுகளும், ஊர் ஊராக வாங்கிப் போடப் பெற்ற நிலங்களும் ஒருவனின் தகுதி நிலைகளை உயர்த்திக் காட்டுவன என்றால், வள்ளுவர், சாக்ரடீசு, மார்க்சு, இலெனின் போன்ற பெருமக்களுக்கு அந்தத் தகுதிகள் இருந்ததில்லையே—ஏன்? இவற்றைப் பற்றியெல்லாம் ஒரு தனிப்பட்ட வாழ்க்கை வாழ விரும்புகின்ற ஒருவன் எண்ணிப் பார்க்க வேண்டுவதில்லை. ஆனால் பொது வாழ்க்கைக்கென்று அடுப்படியை விட்டு, வீட்டுப் படியைத் தாண்டித் தெருப்படியினின்றும் இறங்கித் தெருவுக்கே வந்து விட்டானே அவன் கட்டாயம் எண்ணிப் பார்க்க வேண்டும்; இல்லா விட்டால் அவனை எண்ணிப் பார்க்கும்படி செய்து விடும், இவ்வுலகம்! அதுதான் உலகத்திற்குள்ள பெருமை. தன்னை உணர்பவனை உயர்த்தும்; உணராதவனை அது வீழ்த்தும்!

ஆனால் நம் தி.மு.க. அமைச்சர்களுக்கு இவற்றைப்பற்றியெல்லாம் கவலையிருப்பதாகவே தெரியவில்லை. அவர்களும் பொது மக்களுக்காகப் பெரிய திட்டங்களாகப் போட்டு, அவற்றை நிறைவேற்றிக் கொண்டிருப்பதாகப் பட்டியல்கள் போட்டுக் காட்டுகின்றனர்தாம்! ஆனாலும் மக்களிடத்தில் உள்ள முணுமுணுப்புகளை நாம் உற்றுக் கேட்கும்பொழுது, அவர்கள் போட்டுக் காட்டும் பட்டியல்களில் உள்ள திட்டங்களின் முழுப்பயனகளும் அவர்களைப் போய்ச் சரியான வகையில் எட்டவில்லையோ என்று ஐயுற வேண்டியுள்ளது. இந்தக் குறைபாடுகளை நாம் மறைத்து விடுவதற்கில்லை. பொதுவாகவே அவர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஆட்சியினரிடம் உள்ள குறைகள் பலவாகவிருக்கலாம். அவற்றைப் பொதுமக்கள் ஓரளவு பொறுத்துக் கொள்வார்கள் ஆனால் அந்தக் குறைகளே குற்றங்களாகச் செழித்து வளர்ந்து, தங்களை வந்து, தாக்குகின்றபொழுது அவற்றை அவர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். இந்த இரண்டு நிலைகளுக்கும் உள்ள இடையீட்டுக் காலத்தைத்தான் ஒரு குழுவினரின் ஆட்சிக் காலமாக வரையறுக்கின்றது வரலாறு. இவ்வகையில் அவர்கள் சாட்டுகின்ற குற்றங்களுக்கெல்லாம் சான்று கேட்டுக் கொண்டிருக்கக்கூடாது. சான்றுகளை நாமே கண்டு பிடிக்க வேண்டும். பொதுமக்கள் என்றைக்குமே அரசு செய்கின்ற வேலையைச் செய்ய மாட்டார்கள். அவ்வாறு அவர்களைச் செய்ய விடவும்

கூடாது; அந்தநிலை விரும்பத்தக்கதும் அன்று. எனவே கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் சான்று கேட்டுக் குற்றங்களை அதிகாரக் குழிகளில் போட்டு மூடி மறைத்துவிட முயலக்கூடாது. குற்றங்கள் என்றும் குற்றங்களே; அவை குறைகளல்ல, துணிகளில் உள்ள கறைகளைப்போல! சவர்க்காரத்திற்குப் போகாத சில கறைகளும் வேறுசில காடிக்காரங்களுக்குப் போய் விடலாம். ஆனால் ஆட்சித் துறையைப் பொறுத்தமட்டில், கறைகள் கிழிசல்கள் ஆகிவிட்டால், அவற்றைத் தைத்துப் போட்டுக்கொள்ள பொதுமக்கள் விரும்ப மாட்டார்கள். ஒருவேளை அப்படி விரும்பினாலும் அதைக்கூட ஒரு கால எல்லைவரை—தான் கையாளுவார்கள்; அதன்பின் கிழிசல்கள் நிறைந்த கந்தைத் துணியையும் தூக்கியெறிந்து விட்டு வேறு புதுத்துணிகள் வாங்கிக் கொள்ள விழைவார்கள். ஆட்சியினர் இந்த உவமையை நன்கு விளங்கிக் கொள்வார்கள் என்று கருதுகின்றேன்.

இந்தச் சூழ்நிலையில் தென்மொழி, தி. மு. க. அமைச்சர்களுக்குச் சொல்லிக் கொள்வது-இன்னும் சற்றுவெளிப்படையாகச் சொன்னால் எச்சரிக்கை தருவது இதுதான், தென்மொழி என்றுமே ஆட்சி நலனில் அக்கறை கொண்டது. அஃது எந்தநிலைக்காகவும் எந்த ஒரு நன்மைக்காகவும் எந்த ஓர் ஆட்சிப் படிக்கட்டையும் ஏறியது கிடையாது; அது தேவையுமில்லை. பொதுமக்களுக்கு இயல்பாகக் கிடைக்கின்ற உரிமை நலனே அதற்குப் போதும். பிற இதழ்களைப்போல, அரசுத்துறை விளம்பரங்களுக்காகவோ நூலக வாய்ப்புகளுக்காகவோ அஃது எவர் வீட்டுக் கதவையும் போய்த் தட்டியதில்லை. எனவே, கொஞ்சம் துணிவொடு இதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றது.

"வெற்று ஆரவார விளம்பரங்கள் உண்மைப் புகழ் ஆகாது. வெறும் வண்ணச்சுவரொட்டிகள் வரலாறு எழுதப் பயன்படுவதில்லை. உங்கள் அரச ஊர்வலங்களை வேடிக்கை பார்க்க வருகின்ற கூட்டங்களையெல்லாம், உங்கள் அரசாட்சியை மெச்சிப் பாராட்ட வரும் கூட்டங்களாக எண்ணித் தப்புக் கணக்குப் போட்டு வயிறு நிரம்பி விடாதீர்கள். இந்த நாட்டுப் பொதுமக்களுக்கு உண்மை அரசியல் என்பதே என்னவென்று தெரியாது. தெரிந்தால் ஒரு திரைப் படக் கவர்ச்சிக்காரரிடம் அரசியல் நம்பிக்கை வைத்துத் தங்கள் மனத்தையும் அறிவையும் பறிகொடுக்க முன் வருவார்களா? அவர்களைப்போய் நீங்களும் அதேமுறையில் ஏமாற்ற நினைக்க வேண்டாம். கொஞ்சமேனும் நடுநிலையுடனும் உண்மை உள்ளத்துடனும் தொண்டு உணர்வுடனும் நடந்து கொள்ளுங்கள். பாராட்டுகளையும், பல்லிளிப்புகளையும் வெறுத்து ஒதுக்குங்கள். பூமாலைகளையும், போற்றிப் பாடல்களையும் புழுதியெனக்கருதி நடவுங்கள். வெறும் குப்பை மேடுகளையே

கோபுரங்களாகக் கருதிக் கொண்டு உங்கள் குழிகளை நீங்களே தோண்டிக் கொள்ளாதீர்கள் ஆரவாரம் செய்து கூட்டஞ் சேர்ப்பதும், அனைவரையும் அழைத்துப் பாராட்டச் செய்வதும் மிக மிக எளிது! பணத்தையும் பதவிகளையும் வீசியெறிந்தால், பத்து காசுக்கு நூறு புலவர்கள் ஆயிரம் பாட்டுகளைப் பாடி அகமகிழ்வூட்டுவார்கள்.

தமிழ் வரலாற்றின் இடைக்கால இலக்கியங்களைப் பாருங்கள். எத்தனை உலாக்கள்! தூதுக்கள்!! மடல்கள்!!! அவற்றைப் பாடிய எத்தனைப் புலவர்களுக்கு எத்தனை எத்தனைப் பாராட்டுகளும் பொற் பதக்கங்களும் புலநிலங்களும் கிடைத்தன! ஆனால் அவை எங்கே? அவர்கள் பாடிய சிற்றரசர்களும் அவர்களின் ஆட்சியமைப்புகளும் எங்கே? அவர்கள் பாடிய தூதுக்களையும் உலாக்களையும் இன்று யார் தீண்டுகின்றார்கள்? உண்மையான புகழ், தேடக்கூடியதன்று; தேடி வரக் கூடியது! நாம் செய்கின்ற செயல்களில்தாம் அது பூத்துக் குலுங்கும்! அப்படிப்பட்ட புகழ் காசுகளால் உருவாக்கக் கூடியதன்று! காலத்தால் உருவாவது! விளம்பரங்களால் விளைவதன்று; வினை களால் வளர்வது! இந்தச் சிலைதிறப்பு விழாக்களையும், பிறந்த நாள் விழாக்களையும் இனிமேலாகிலும் விட்டுத் தொலையுங்கள்! அவற்றால் அச்சுக்கூடக் கொள்ளைக்காரர்களும், ஆரவார வீணைப்பாட்டுக் காரர்களுமே பயன் பெறுகின்றார்கள! ஏழைகள் அவற்றால் வயிறெரிந்து சாகின்றார்கள்; மனம் நொந்து வேகின்றார்கள். அவர் களின் நோகின்ற மனத்தையும் நொடிகின்ற வாழ்க்கையையும் கொஞ்சம் கவனித்து நோக்குங்கள்!

உங்கள் படியரிசித் திட்டம் என்னாயிற்று? பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் ஊருக்கு ஒன்றிரண்டாகத் திறந்து, அவற்றிற்கு உங்கள் பெற்றோர் பெயர்களையும் சூட்டி, உள்ளக்களிப்பில் ஊசலாடு கின்றீர்களே, அவற்றில் சேருவதற்கு ஏழை மக்களால் இயல்பாக முடிகின்றதா? எத்தனைப் பேருக்கு, அவற்றில் இடம் வாங்குவதற்கு, வாய்க்கரிசி போட வேண்டியிருக்கின்றது! நீங்கள் தருகின்ற சலுகை களைப் பெறுவதற்கு எத்தனை அலுவலகங்களின் படிக்கட்டுகளுக் கெல்லாம், பணப் படையல் செய்ய வேண்டி உள்ளது! அதைக் கவனித்தீர்களா? அரசு, நன்மை விளையும் திட்டங்களைப் போட்டு விட்டால் மட்டும் போதாது; அந்தத் திட்டங்களால் விளையும் நன்மை அந்த நாட்டின் அடித்தளத்தில் உள்ள மக்களைப் போய் எட்டுகின்றதா என்றும் பார்க்க வேண்டும். அவ்வாறு எட்டாமற் போகுமானால் மக்கள் நன்மைக்காகப் போடும் திட்டங்களே, நாட்டுக்குக் கேடாக முடிந்துவிடும் என்பதை மறந்து விடாதீர்கள்.

பக்தவத்சலம் காலத்தில் ஏற்பட்ட மாணவர் போராட்டங்களுக்கும், தொழிலாளர் போராட்டங்களுக்கும் எத்தனை வகை விளக்கம் கற்பித்தீர்கள். இப்பொழுது உங்கள் காலங்களில் நடைபெறும் கதவடைப்புகளுக்கும் கல்லூரி மூடல்களுக்கும் என்ன புது விளக்கம் கூறப் போகின்றீர்கள்! அவர்கள் காலத்தில் நடவாத பிழைகளெல்லாம் உங்கள் கண்முன் நடைபெறும் இந்தக் கேடுகெட்ட நிலைகளுக்கெல்லாம் என்ன அமைதி கூறி மக்களை ஏமாற்றப் போகிறீர்கள்? ஒழுக்கமற்ற தான்தோன்றித் தலைவர்களாலேயே மாணவர் குமுகாயம் தறிகெட்டுப் போகின்றது என்னும் உண்மை உங்கள் மண்டைகளில் ஏன் இன்னும் உறைக்கவில்லை?

இந் நாட்டைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருப்பதும், கோடான கோடிக் கேடுகளை உருவாக்கம் செய்து கொண்டிருப்பதும், இந் நாட்டிலுள்ள அழிக்க முடியாத பார்ப்பனியமே என்று ஈரோட்டுப் பாடம் படித்த நீங்கள், இக்கால் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்பது உங்களுக்கு விளங்கவில்லையா? 'கருணாநிதி நகர்' என்றும் 'அண்ணா நகர்' என்றும் உங்கள் பெயர்களால் கட்டப்பட்டு வரும் அழகிய, சிறந்த, காற்றோட்டமும் ஊற்றோட்டமும் மிக்க ஒளியுலாவும் நகர் அமைப்புகளில் இன்று யாரைக் குடியேற்றிக் கொண்டிருக்கின்றீர்கள்! உங்களை இந்த அளவுக்கு உயர ஏற்றிவிட்ட ஏழைகள் என்னும் அந்த ஏணிப்படிகளையா? இல்லையே! அந்தப் பார்ப்பனப் பாம்புகளன்றோ அங்கே குடியேறி, அவற்றில் உலா வந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பாம்புகள் உங்கள் பெயர்களை வாயால் சொல்லவும் வெறுப்புற்று, அவற்றை அக்கிரகாரங்களாகவன்றோ உருவாக்கிக் கொண்டுள்ளன! உங்களை உருவாக்கிய அந்த எறும்புகளாகிய ஏழை மக்கள் கூவத்துக் கரைகளையன்றோ குடியிருப்புகளாக மாற்றிக் கொண்டுள்ளனர்.

உங்களைத் தூக்கி அரசுக் கட்டிலுக்கு அனுப்பியவர்களை மறந்து விட்டு, உங்களைச் சுற்றி வருகின்ற 'இளித்த வாயர்'களுக்கும், அய்யர் அய்யங்கார், பூணூல் திருமேனிகளுக்கும், அரையம்மணப் பார்ப்பன இளவட்டங்களுக்குமன்றோ, அவ் வானுயர்ந்த மாளிகைகளை வரிந்து கட்டி வருகின்றீர்கள். உங்கள் மக்கள் உங்களை அணுகவும் அஞ்சி ஒடி ஒதுங்குகின்ற நேரத்தில், உங்கள் எதிரிகளுக்கும், கள்ள வாணிகர்களுக்கும் கையூட்டுக்காரர்களுக்குமன்றோ விருந்தும் விழாவும் நடத்திக் கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் அரியணையேறினால் இந் நாட்டை ஆயிர மாயிர மாண்டுகளாகத் தீராத கொடுநோய்களுக்கும், கொள்ளையடிப்புகளுக்கும் ஆளாக்கிய பார்ப்பனக் குள்ளநரித்

தனத்திற்கும் குழிதோண்டுவீர்கள் என்றன்றோ அந்த ஏழைப் பஞ்சையர்கள் எண்ணிச் செயல் பட்டார்கள். இன்று அவர்களுக்குப் பரிசாக நீங்கள் போட்டுக் காட்டும் 'பட்டியல்களை' அன்றோ நீட்டுகின்றீர்கள்! நீங்கள் அவர்களுக்காகச் செய்த பட்டியல்களின் பெயர்மறைவுக்குள் ஊழல்களும் உன்மத்தங்களுமன்றோ குடிபுகுந்து கொண்டு அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நலன்களுக்கு இடையூறாக நின்று கொண்டிருக்கின்றன.

திரைப் படங்களைக் காட்டிக் காட்டித் திரையை நீக்கிக் கொண்டு வெளியே வந்தீர்கள். இன்றைக்குத் திரைப்படங்களைப் பார்த்துவிட்டு நரைக் கிழங்களெல்லாம் அன்றோ நரம்பு புடைத்து நடுத்தெருவில் வரம்புமீறி நடந்து கொள்ளுகின்றன. அம்மணக் காட்சித் திரைப் படங்களை நூறு நாட்கள் ஆயிரம் நாட்கள் ஓட்ட இசைவு தந்துவிட்டு, அவற்றிற்குக் காலை பத்து மணி முதல், இரவு இரண்டு மணிவரை மாணவர்களைக் காக்கப்போட்டு, நாட்டின் ஆக்கத்தைக் கெடுக்கின்ற நிலைக்கு நீங்களே அவர்களைக் கொண்டுவந்து விட்டீர்களே! இந்த நிலைகளையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க நேரமில்லாமல் அதே திரையிலன்றோ உங்கள் ஒளி முகங்களைக் காட்டிக்கொள்ளத் துடி துடிக்கின்றீர்கள். உங்களுக்கு வேண்டிய ஓரிரண்டு திரைப்படத் தடியன்களுக்காக நாட்டையேயன்றோ மடித்துயிலில் ஆழ்த்தி விட்டீர்கள்! திரைப்படக் கலி(சனி)யனை ஓர் ஐந்தாண்டுக் காலத்திற்காகிலும் மூடித் தொலையுங்கள் என்றால் உங்களுக்கு மூக்குக்கு மேல் சினம் வருகின்றது!

எப்படியோ, பள்ளிக்கூடங்கள் முதல் பாட்டாளிக் கூடங்கள் வரை பட்டாளத்தையும் காவற்காரர்களையும் வைத்தே அரசியல் நடத்தி விடுவது என்று ஆட்சியாளர்களாகிய நீங்கள் வரிந்து கட்டிக் கொண்டீர்கள் பார்ப்பனர்களோ, இதுதான் சமையம் என்று உறுதி கட்டிக்கொண்டு நாட்டைச் சீனனுக்கோ அமெரிக்கனுக்கோ காட்டிக் கொடுக்கத் துணிந்து விட்டனர்! இடையில் நசுங்கிச் சாகின்றவர்கள் எழைகளே! அவர்களைக் கண்ணீர் வடிக்க விடாதீர்கள்; பிறகு நீங்கள் செந்நீர் வடிக்க வேண்டி வரும்! உங்கள் இருநிறக்கொடி இனியும் கோட்டையில் பறக்கவேண்டி விரும்பினால், இந்நாட்டு மக்களின் மூலை முடுக்கிலிருந்து வரும் முக்கல் முணகல்களுக்குக் காது கொடுங்கள்! கண் விழியுங்கள்! இல்லாது போனால் பக்தவத்சலம் வீட்டுக்குப் பதவி போன விருந்தாளியாக இரவு நேரங்களில் போய்வர வேண்டியிருக்கும்! எச்சரிக்கை!

— பெருஞ்சித்திரன்.

ஒரு மொழிநிலை ஆய்வு:

# சிலம்பினும் பெருங்கதை காலத்தால் முந்தியதா? வையாபுரியார் கூற்று உண்மையா?

இரா. காசிராசன், க. மு.
ஆய்வாளர், தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக் கழகம்.

1:0 இப்போது கிடைத்துள்ள தமிழ்ப் பாவியங்களில் காலத்தால் முற்பட்டன சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை என்பன. இவற்றிற் சிலம்பே காலத்தால் மிக முற்பட்டதென்பது பெரும்பான்மைத் தமிழறிஞர்களின் முடிபு. பேராசிரியர் வையாபுரியவர்கள் மட்டும் பெருங்கதையே காலத்தால் முற்பட்டதாதல் வேண்டுமெனக் கருதுவர். இவ்விருகருத்து மூரண்பாட்டிற்கும் முடிவு காணும் நோக்கில் இம்மொழிநிலை ஆய்வு அமைகின்றது.

## 1:1.0. ஒலியன் வருகை-மொழி முதல்: (Occurance of phonemes)

ஒலியன் (phoneme) வருகையில் சிலம்பிற்கும் பெருங்கதைக்குமுள்ள வேறுபாடுகள் மட்டுமே இங்குக் காட்டப்படுகின்றன.

1:1:1. 'ஔ'-தனித்தும், க, த, ந, ப, ம, வ-வொடும் கூடி மொழி முதலாகுமென்பர் தொல்காப்பியர். கால வளர்ச்சியில் ஔ > அவ்-ஆக மாற்றமடைந்து வழக்கொழியும் நிலை தென்படுகின்றது. கழக இலக்கியம், சிலம்பு, பெருங்கதையில் 'ஔ'-வழக்கு படிப்படியாகக் குறைந்து வந்துள்ளமையைக் காண முடிகின்றது.

1:1:2. மொழிமுதல் 'ஔ'-கழக இலக்கியத்தில் அருகிய வழக்கு. சிலம்பு, கதையில் இல்லை. சிலம்பில் ஔ > அவ்-ஆக அமைகின்றது. (அவ்வியம் 30:13, அவ்வை 29:5–4).

1:2:1. க.இ.இல் மொழிமுதல் 'கௌ', 22-இடங்களில் (கௌவை-20 இடம், கௌவைத்து–நற்:36:8; கௌவைநாற்று-குறுந்:282 என ஈர் இடம்) வருகின்றது. 'கௌ' > கவ்–17 இடங்களில் காணப்படுகின்றது. கல்வி, கவ்விது, கவ்விய, கவ்வியது, கவ்வின், கவ்வினர், கவ்வும் என்பனவும் இம்மாற்றத்தின் விளைவெனலாம். சிலம்பில் 'கௌ' மட்டுமே உண்டு (கௌசிகன்–13 : 47, கௌரியர்–15 : 2). பெருங்கதையில் 'கௌ' நான்கிடங்களிலும்

(கௌவை), 'கவ்'-பல இடங்களிலும் (கௌவை), 'கவ்' பல இடங்களிலும் (கவ்வை-7 இடம், கவ்வி-8 இடம், கவ்விது-3.இடம்; கவ்விய-4. இடம்) வருகின்றது.

1:2:2. மொழிமுதல் 'தௌ' க.இ.இல் அருகிய வழக்கு (தௌவின-நற்:379, தௌவென்றன்று-நற்:319). 'தவ்'-வழக்கும் சிறுபான்மையே. (தவ்வென்றன்று-நற்: 319, தவ்வென்று-நெடு: 185, தவ்வென-குறுந்: 356). சிலம்பு, கதையில் 'தவ்' மட்டுமே உண்டு. 'தவ்வை' சொல் சிலம்பில் இரு இடங்களிலும், கதையில் 15-இடங்களிலும் வருகிறது. இச்சொல் க.இ.இல் இல்லை. குறள், மணிமேகலையில் உண்டு.

1:2:3. 'நௌ'வும் 'நவ்'வும் சிலம்பு, கதையிலில்லை. அகத்தில் 'நவ்' (7:10) மட்டுமே உண்டு.

1:2:4. பௌ > பவ்-அகம், புறம், கலி, சிலம்பில் இல்லை. 'பௌ' மட்டுமே உண்டு (பௌவம்-அகம்: 70:14, சிலப்: 8:1, 24:8-3). கதையில் இரு வடிவமும் உண்டு. (பௌவம்–1:44: 70. ஏழு இடங்களில், பௌவத்து-நான்கு இடங்களில் பவ்வத்து–3:19: 20).

1:2:5. 'மௌ'வும் 'மவ்'வும் மொழிமுதல் சிலம்பிலில்லை. 'மௌ'-கதையிலும் அகத்திலும் உண்டு. (மௌவல்–அகம். 21:1, கதை-1:5:40).

1:2:6. 'வௌ' சிலம்பு (வௌவிய-23:102) கதை (வௌவ-1:55:128, வௌவிய–2:17:121, வௌவுதல்-1:43:31, வௌவும்-3:1:12) அகம் (வௌவினர்-236:3, வௌவி-253:16, வௌவுநர்-1:14) இவற்றில் அமைகின்றது. 'வவ்'-சிலம்பிலில்லை. அகத்திலும் (வவ்வல்-136:23, வவ்வி-346.23, வவ்விய-149:12, வவ்வின-348:11, வவ்வும்-148:6) கதையிலும் (வவ்வல்-3:14:29, வவ்விய-5:9:90) அமைகின்றது.

1:3. ச, சை, சௌ,-மொழிமுதலாகா (தொல்). 'ச'-மொழிமுதற் சொற்கள் க.இ.இல் 24ம், சிலம்பில் 36ம், கதையில் 54-ம் காணப்படுகின்றன. இது கால வளர்ச்சி நிலையைக் காட்டும். சை, சௌ-மொழி முதல் சிலம்பு, கதையில் இல்லை.

1:4:0. ஆ, எ, ஒ-வொடு 'ஞ' மொழிமுதலாகும் (தொல்.) நன்னூலார் 'அ' வொடும் ஆம் என்பர்.

*1:4:1.* 'ஞ'-க.இ. இலும் (ஞமலி, ஞமன், ஞமன்ன், ஞரல), கதையிலும் (ஞமலி-*1:37:252*) உண்டு. சிலம்பிலில்லை.

*1:4:2.* 'ஞா' மொழி முதலாகும் சொற்கள் க.இ.இல் *19*-ம், சிலம்பில் *9*-ம், கதையில் *13*-ம் அமைகின்றன. 'ஞானம்' சொல் மட்டுமே சிலம்பில் புதியது. கதையில் ஞாழ், ஞானத்து, ஞானம், ஞானவள்ளியத்து, என்பன புதியன. இவை கால வளர்ச்சி காட்டுவனவாகலாம்.

*1:4:3.* 'ஞெ' மொழி முதல் மூன்றிலுமுண்டு. கதையில் ஞெமரிய, ஞெமிதி என்பன புதிய சொற்கள்.

*1:4:4.* 'ஞூ'-மொழிமுதல் கதையில் மட்டுமே உண்டு. (ஞூற்று-*2:5:47*)

*1:5:0.* 'ய' கரம் 'ஆ'வொடு கூடி மட்டுமே மொழி முதலாம் (தொல்.) அ. உ, ஊ, ஒ, ஒள-வொடும் ஆம் (நன்.)

*1:5:1.* 'ய'-மொழி முதலாக வுடைய 'யவனர்' என்ற சொல் மட்டுமே க. இ. இலும், சிலம்பிலும் காணப்படுகிறது. கதையில் யமுனை, யவனத்து, யவனம், யவனர் என்பன காணப்படுகின்றன.

*1:5:2.* 'யூ'-மொழிமுதல் சிலம்பிலில்லை. கதையில், 'யூகந்தராயணன்' (*2:10:147*), யூகந்தராய(ன்) (*4:7:186*), யூகி (*1:43:6*), யூகம் (*2:15:30*) முதலான 'யூ'-வை மொழி முதலாக் கொண்ட சொற்கள் காணப்படுகின்றன.

*1:5:3.* 'யோ'-மொழி முதல் சிலம்பிலும் கதையிலும் உண்டு. (யோகம் சிலப்: *14:70*, பெருங்: *2:8:186*; யோசனை-சிலப்:*25:15*, பெருங்:*1:38:74*).

*1:6.* 'ர'-மொழி முதல் க.இ.இலும், சிலம்பிலும் இல்லை. கதையிலுண்டு.

(ராசன்-*3:1:4*; ராயன்-*2:17:120*, *3:24:53*, *3:25:141*, *3:26:102*, *2:27:14*, *163*, *197*, *209*, *4:1:10*, *4:8:42*).

இன்னணம் மொழிமுதல் வருகைகள், கதையின் காலம் சிலம்பிற்குப் பிற்பட்டதென்பதற்குச் சான்று பகர்கின்றன.

## உ:1. ஒலியன் வருகை-உயிரொலியன்கள்: [Vowels]

*2:1:0.* சிலம்பு, கதையில் வரும் ஒலியன் வருகை (முதல், இடை, கடை) வேறுபாடுகள் மட்டுமே இங்குச் சுட்டப்படுகின்றன. இது காலக்கணிப்பிற்குப் பெரிதும் துணை செய்வதன்று.

2:1:1. சிலம்பில் மொழிமுதல் 'அ'-பகரத்தின் முன் வாராது. கதையில் வருகின்றது. (அப்ப-2:9:157, அப்பி: 1:40:144, அப்பிய-1:33:119, அப்பு-1:52:16, அப்புபு-3:9:90, அபயம்-1:37:22).

2:1:2. மொழிமுதல் 'ஆ'-ப, ம-வுக்கு முன் சிலம்பில் அமைய வில்லை. கதையில் ஆப்பு (1:37:22); ஆப்பியாயினி (3:22:34) என்பன அமைகின்றன.

2:1.3:1. மொழிமுதல் ஈ-சிலம்பில், ஞ, ழ, ள, ல, வ-முன் வருதலில்லை. கதையில் ழ, வ-முன் வருகிறது. (ஈழத்து-1.58:37; ஈவல்-3:23:43; ஈவன்-3:12:10; ஈவன -3:12:49; ஈவோர்-1:39:56).

2.1:3:2:. சிலம்பில் மொழியிடை ஈ-ன, ல-வை யடுத்து வாராது. கதையில் 'னவை'-வை யடுத்து வரும். (மானனீகை-4.13:39).

2.1:4. மொழிமுதல் 'உ'கரம், 'ஞ'-முன் சிலம்பில் அமைய வில்லை. கதையில் உஞ்சை (2:9:40), உஞ்சேனை (1:35:23) உஞ்சையர் (4:5:93), என்பன அமைகின்றன.

2:1:5:1. மொழிமுதல் 'ஊ'-ஞ, ப. ய, ல, வ, ள-முன் சிலம்பில் வரவில்லை. கதையில் 'ள'-முன் (ஊளை-1:55:65) வருகிறது.

2:1:5:2. மொழி இறுதி 'ஊ'-க,த,ப,ம-வை யடுத்துச் சிலம் பில் அமையும். கதையில் க-வையடுத்து அமையவில்லை.

2:1:6:1. மொழிமுதல் 'ஒ'-க, ஞ. ம-முன் சிலம்பில் வரவில்லை. கதையில் க-முன் வருகிறது. (ஒக்கல்-3:7:20, ஒக்கும் 1:33:164).

2:1:6:2. மொழியிடை 'ஒ'-ப, ஞ-முன் சிலம்பில் இல்லை. கதையில் ப-முன் வருகிறது. கொப்புள்-3:9:16, கொப்புளம்-1;53: 165, கொப்பூள்-2:15:68)

2:1:7. மொழிமுதல் 'ஓ' - க, ஞ, ண, ந, ய, ழ, ள, ற-முன் சிலம்பில் வரவில்லை. கதையில் க, ய-முன் வருகிறது. (ஓக்கி 2:3:15; ஓகை-5:6:76; ஓயாது-1:33:200).

2:1:8:1. மொழிமுதல் எ-ச, ப முன் சிலம்பில் வரவில்லை. கதையில் ச-முன் வருகிறது. (எச்சம்: 2:11:123)

2·1:8;2. மொழியிடை எ-சமுன் சிலம்பில் வரவில்லை. கதை யில் மெச்சார் (5:3:44), மெச்சா (3:17:71), மெச்சுவனன் (5:4:61) என்னும் சொற்களில் அமைகின்றது.

2:1:9. மொழியிடை ஏ-சிலம்பில் ஞ,ழ,ள-வின்பின் அமைய வில்லை. கதையில் ழ-வின் பின் அமைகின்றது (வாழேன்-3:21.91).

## உ:உ. மெய்யொலியன்கள்: (Consonants).

2:2·1, சிலம்பில் மொழியிடைக் 'க'-ஈ, ஏ-முன் அமையவில்லை. கதையில் ஈ-முன் அமைகின்றது. (பாகீரதி-1:37:240)

2:2:2. மொழியிடைச் 'ச்'-ஞ, ட-வையடுத்தே சிலம்பில் வருகிறது. கதையில் 'ற'-வையடுத்தும் (புகற்சித்து-1:48:178 முதலான பல) வருகின்றது.

2:2:3:1. சிலம்பில் மொழியிடை ச்ச்-அ, இ, உ, ஊ, ஏ, ஓ. ர, ழ-பின் அமைகிறது. கதையில் எ, ய-வின் அடுத்தும் அமைகின்றது. (மெச்சார்-5:3:44; பாய்ச்சி-4:12:84, 104).

2:2:3:2. மொழியிடை ச்ச்-அ,இ,உ-வின் முன்னர் மட்டுமே சிலம்பில் வருகிறது. கதையில் 'ஆ' முன்னரும் வருகிறது. (மெச்சார்-5-3-44).

2:2:4:1. மொழியிடை 'ண' ஓ-பின் சிலம்பில் அமையவில்லை. கதையில் உரோணி (1:47:212), கோணுவட்டம் (1-46:62), கோணம் (1:45:75), கோணத்து (1:42:29), கோண வட்டம் (3:20:22) கோணை (1:48:69) எனப்பல சொற்களில் அமைகின்றது.

2:2:4:2. மொழியிறுதி 'ண'-சிலப்பில் ஈ, ஒ, ஓ-பின் வருதலில்லை. கதையில் ஓ-பின் வருகிறது, (கோண்-1:49:23).

2:2:5. மொழியிடைத் 'த'-ஈ, எ-முன் சிலம்பில் வரவில்லை. கதையில் ஈ முன் வருகிறது. (போதீர்-1:56:232).

2:2:6. மொழியிடை த்த்-எ-பின் சிலம்பில் அமையவில்லை. கதையில் செத்த (4:3:75) என்ற சொல்லில் அமைகின்றது.

2:2:7. மொழியிறுதி 'ந'-சிலம்பில் இ-பின் அமைகின்றது. (வெரிந்-26:214). கதையிலில்லை.

2:2:8. மொழியிடைம் 'ப'-சிலம்பில் அ, ஆ, ஊ, ஓ,-பின் மட்டுமே வருகின்றது. கதையில் இ, ஈ, உ-பின்னும் வருகின்றது. (உபகாரம்-3:20:187; தீபம்-5:1:181 பிண்டிபாலம்-3:20:37]

2;2:9; மொழியிடை 'ப்ப்'-சிலம்பில் ர, ய-பின்மட்டுமே வரும். கதையில் 'ழ'-பின்னும் வருகிறது. (சமழ்ப்பு-1:50:7).

2:2:10. மொழியிறுதி 'ய'-சிலம்பில் இ, ஈ, உ-பின் வாராது. கதையில் 'உ'-பின் வரும். (உல் 1:46:344).

2:2:11:1. சிலம்பில் மொழியிடை 'ர'-ஈ, எ-தவிர்ந்த ஏனை உயிர் முன்னரும், ப, ப்ப, த் த்த, ச்ச, க், க்க, ம், ந்த, வ் ஆகிய மெய்முன்னரும் வரும். கதையில் ஈ, ங்க-முன்னரும் வருகிறது. (பரீஇய-1:51:197; சார்ங்கம்-2:4:197).

2.2:11:2. 'ர'-குற்றெற்ருகாது (தொல்.). க.இ., சிலம்பில் 'ர'-குற்றெற்ருகவில்லை. கதையில் குற்றெற்ருகிறது. (இர்-3:23:30) இது காலத்தால் பிற்பட்ட வழக்காகக் கருதப்படுகிறது.

2:2.12. மொழியிடை 'ல்ல்',-ஈ, எ-முன் சிலம்பில் வரவில்லை. கதையில் ஈ-முன் வரும். (செல்லீர்-2:8:117).

2:2:13. சிலம்பில் மொழியிடை 'ள'-ஈ, உ, எ-முன் வருதலில்லை. கதையில் ஈ-முன் வருகின்றது. (கொளீஇனிர்-1:56:104; கொளீய-1:42;34).

2:2:14. மொழியிடை 'ழ'-ஏ முன் சிலம்பிலில்லை. கதையில் வாழேன் (3:21:91) என்ற சொல்லில் அமைகிறது.

2:2:15. மொழியிடை 'ற'-சிலம்பில் ப, க-முன் மட்டுமே வரும். கதையில் ச முன்னும் வரும். (பயிற்சி-1:34:82).

2:2:16. மொழியிடை 'ற்ற்'-ஈ, ஊ, எ,-முன் சிலம்பில் வரவில்லை. கதையில் ஈ-முன் வருகிறது. (ஆற்றீர்-5:2:35).

2:2:17. மொழியிடை 'ண'-சிலம்பில் ஈ, உ, எ,-முன் வருதலில்லை. கதையில் உ, எ-முன் வரும் (பனுவல்-1:47:124; கண்டனென்-2:10:12).

2:2:18. மொழியிடை 'ன்ன'- ஈ முன்னர் சிலம்பில் அமைவது (நன்னீர்) கதையிலில்லை.

## 2:3. வடமொழி இன[வர்க்க] ஒலியன்கள்:

வடமொழி இன(வர்க்க) ஒலியன்களின் தாக்குதல் பெற்ற சில சொற்கள் ஒலி வேறுபட்டு (வரி வடிவில் வேறுபடாது) பொருள் வேறுபட அமைகின்றன. பெருங்கதையில், 'கானம்'-என்ற சொல் க.இ.இலும் சிலம்பிலும் 'காடு' என்ற பொருளில் மட்டுமே பயன்படப் பெருங்கதையில் 'பாட்டு' என்று பொருளிலும் (பெருங்: 5:3:98) பயன்படுத்தப் படுகிறது. இவ்வாறு கதி (1:32:22, 1.37:

112, 4:7:43, 2:6:163, 2:18:27), கனம் (1:32:78, 1:37:164, 3:17:116), கிரந்தம் (3:1:123), தனம் (4:13:78, 5:8:6), தாகம் (1.52:59), தானம் (1:35:5, ) 1:38:264, 1:12:38, 1:43:177, 3:14: 24, 4:2:22, 5.3.83), தீபம் (5 1.181), பதம் (4.12.192, 5.3.134, 2.7.40), பாசம் (1.37.29, 2.4.62, 4.8.55] பாவம் (1.53.157,) பாவனை (5.8.55) முதலான சொற்களும் வடமொழி இனஒலியன் தாக்குதல் பெற்றமைந்து, பொருள்பல தந்து நிற்கின்றன. இவற்றைக் கழக இலக்கியத்திலோ, சிலம்பிலோ காண்டலரிது. இவை பிற்பட்ட கால வழக்குகள்.

## 3. சொல்லமைப்பு நிலை:

3-1. எதிர்மறை முன்னொட்டு (Prefix) தமிழில் புக்கது பிற் காலத்ததென்பர். இது க. இ. இலும், சிலம்பிலும் இல்லை. கதையில் அவமதித்து (3-25-35), அபயம் (1-47-66), அநங்கன் (3-5-116) அனங்க (4-12-115), அசலம் (1-43-127)என்பன அமை கின்றன.

3:2. காரன், காரி, காரர்-பின்னொட்டு பிற்பட்ட வழக் குடையது. க.இ-இல் இல்லை. சிலம்பில் ஓரிடத்து வருகிறது (துன்ன காரர்-5-32). கதையில் வினைக்காரர் (1:58:41), மணிக்காரர் (3-17-125), கணிகாரன் (3-27-57), சத்தியகாரன்: (3-23-28) எனப் பல அமைகின்றன. இதுவும் கால வளர்ச்சி காட்டுவனவாகலாம்.

3:3 சில புதிய குறிப்பு வினையாலணையும் பெயர் வடிவங்கள் கதையில் இடம் பெறுகின்றன. எழுச்சித்து (1-38-5), நெற்றித்து (1-37-72), படர்ச்சித்து (1-51-67), பயிற்சித்து [2-6-88) புகற் சித்து (1-48-175), புரித்து (3-15-43), மாந்தர்த்து (1-38-54), மாரித்து (4-2-59), முதிர்ச்சித்து (3-14-226) வெறுமைத்து (1-3-156), வென்றித்து (2-20-112), முதலானவும் பிற்பட்ட வழக்காகத் தோன்றுகின்றன.

3:4 முன்னிலைப்பன்மை 'நீவிர்' (1:40:374) கதையில் மட்டுமே இடம் பெறுகின்றது.

3:5. பேராசிரியர் வையாபுரியவர்கள் பிற்பட்ட வழக்குச் சொற்களாகக் குறிப்பன. அந்த, உவாத்தி, கிராமம், குச்சரக் குடிகை, முங்கி-முதலான சிலம்பிலில்லை. இவற்றில் பல கதையில்

உண்டு. பேராசிரியரவர்களால் பிற்பட்ட வழக்குடையனவாகக் கருதப்பெறும் நீர், காறும், 6-இன் உருபு 'தன்', 'உடைய' என்பன சிலம்பில் சிறு வழக்காக அமையக் கதையில் பெருவழக்காக அமைகின்றன. (நீர்-மூ.ப. சிலப்: 12-கதை-24; காறும்-சிலப்:3, கதை-8; தன்-சிலப்-1, கதை-பல; உடைய-சிலப். 1, கதை:10). தன்மை ஒருமை 'நான்', நிகழ்கால இடைநிலை 'கின்று' என்பனவும் இரு பாவியங்களிலும் சிறு வழக்காகப் பயிலப்படுகின்றது. (நான்-சிலப். 7-இடம், கதை: 5-இடம்; கின்று-சிலப்: 3 இடம்; கதை: 2 இடம்).

சுட்டு இடப்பெயர் ஆங்கு, ஈங்கு என்பன கழக இலக்கியத்தும், சிலம்பிலும் பெருவழக்கு. (சிலப். ஆங்கு-50-க்கு மேல்; ஈங்கு-58-இடங்களில்). அங்கு, இங்கு க. இ. இலும், சிலம்பிலும் மிகக் குறைவு (அங்கு-குறிஞ்: 97, கலி. 145-46, சிலப். 5-இடம்; இங்கு-குறுந்: 175-5, கலி:47-10, அகம்: 85-3, சிலப். 5-இடம்). ஆங்கு, ஈங்கு ஆட்சியை விட, அங்கு, இங்கு ஆட்சி பிற்கால இலக்கியங்களில் மிகுதி என்பர். கதையிலும் ஆங்கு, ஈங்கு ஆட்சியை விட அங்கு, இங்கு ஆட்சியே மிகுதி.(ஆங்கு-இருஇடம்; அங்கு-12 இடம்; ஈங்கு-4 இடம்; இங்கு-6-இடம்.)

3.7. பல புதிய, பிற்கால வழக்குடையனவெனக் கருதத்தகும் சொற்களும், சில சொற்கள் புதிய, பிற்காலப் பொருளோடும் கதையில் பயன்படுத்தப்படுகின்றன. அவிநயம் (4-12-188), ஆசனம் (1-47-50], ஆராட்டு (1-42-2), ஆசாரியர் (1-37-152), அத்தவத்திரம் [3-17-147], அத்திகோசம் (4-9-5), ஒலுறுத்து [2-14-19] உத்தமன் (3-20-158] உபகாரம் (3-1-38), உபசாரம் (5-3-4), உபாயம் [1-33-15], உரோமம் [3-1-113], உவாத்தி [1-44-131], கத்திரிகை [4-14-7], கபாலம் [1-36-240], கபோதம் [1-40-14], கரண்டம் [1-57-39], கலசம் [1-32-73], கரம் [1-35-207], காதி [2.3.27], காள சமணன் [1.36.248], குச்சரக் குடிகை [4.13.147] குமரர் [1.32.15], கெங்கை [5.4.122], கேசம் [4.14.29], கோசம் [4.9.5], கோத்திரம் [3.6.185], சதுர்த்தி [2.3 31], சமயம் (1.32.4), சரக்கினர் [3.17.152], சரம் [4.13.2), சனம் [1.38.48], சாங்கியம் (1.36.231), சாத்திரம் [3.19.4], சாதனை [3.4.76], சாமகீதம் [1.44.63], சார்ங்கம் [2.4.197], சுவர்க்கம் [1.42.21], செட்டியார் [2.20.126], சேனுபதி [1.38.203], சோதிடர் [2.18.50], தேசம் [1.36.220], நந்தவனம் [5.1.136], நயனம் [4.13.20], நாயகன் [2.9.46], நாவிதன் [2.4.178], நிதானம் [4.17.62],

நிருமிதம் [2.13.16], நீதி [1,34.71], நேயம் [2.2.196], பத்திரம் [1.58.49], பரிசம் [3.16.8] பாகீரதி [1.37.240], பாடை [1.57.65], பானு [4.13.217], பித்தர் [4.14.72], புத்திரன் [2.11.89], புவி [1.38.33], பூதி [1.36.225], பொத்தகம் [1.34.26], போனகம் [2.3.44], மதுகாம்பீரவனம் [4.4.104], மரணம் [4.7.21], மாசனம் [4.1.19], மாராட்டம் [2.19.72], மூர்த்தம் [5.6.73], விசேடம் [3.14.102], விடம் [1.46.281]. முதலான பலசொற்களும் கதையைப் பிற்பட்ட கால கட்டத்திற்குக் கொண்டு செல்கின்றன.

3:8. பிற்கால வழக்காகிய ஆள், ஆன், ஆர்-விகுதிகள் கதையைவிடச் சிலம்பில் மிகுதி. தன்மை இடமுணர்த்தும் 'ஓ' உருபன் சிலம்பிலுண்டு; கதையிலில்லை.

4. இங்ஙனம் சிலம்பு, கதை மொழிநிலையமைப்பில்—பிற்காலக் கூறுகள் பெருங்கதையிலே மிகுதியாகக் காணப்படுகின்றன. சிலம்பில் சிறுபான்மை. மொழியமைப்பைக் கொண்டு கதை, சிலம் பிற்குப் பிற்பட்டது என்பது மேற்கண்ட பல சான்றுகளால் தெளிவா கின்றது.

## Reference—


1. Descriptive Grammar of Cilappatikaram—Dr. S. V. Subramaniam.
2. Index of Perugkatai—R. Elavarasu.
3. Purananuru Index—Dr. V. I. Subramaniam.
4. Akanaanuuru Index—Dr. S. V. Subramaniam.
5. Descriptive Grammar of Kalittokai—Dr. D. Andiappa (Pillai).
6. Index des mots de La Literature tamoule ancienne Vol :1-Institut Francais D' IndologieP,andichery-1967.
7. Canka I. l lakkiya Corkalajciyam—Tiruvavaduturai Athenam-1965.
8. Pazantamil nuul collataivu-Vol. II-French-India Kalaik Kazakam, Pandichery—1968.
9. Cilappatikaram—8th ed. 1968—U.V.S.
10. Perugkatai—4th ed. 1968—U.V.S.


O

# கலைஞர் அருட்செல்வனார் சொற்பொழிவு!

*திருவாரூரில் நடந்த நளி கஎ (2—12—73) அன்று நடந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க. சிலைதிறப்பு விழாவில் தவத்திரு. குன்றக்குடியடிகளார் அவர்களின் தலைமையில், தமிழக முதல்வர் பர். மு. அருட்செல்வனார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் பிற்பகுதி!*

தமிழகத்தின் அரசியல் வானில், ஒரு காலத்தில் மூன்று பெயர்கள் தமிழ்நாட்டு மக்கள் அத்தனைப் பேருடைய வீடுகளிலும் பலுக்கப்பெற்று உள்ளத்திலே பதிவாகியிருந்தன. அதிலே வேடிக்கை என்னவென்றால், எந்தச் சாதி ஆணவம் ஒழிய வேண்டும் என்று இந்த மூன்று பேரும் பாடுபட்டார்களோ, அந்தச் சாதியை மட்டும் வைத்துக்கொண்டு, அவர்களுடைய பெயர்களை மறைத்து அவர்களுடைய புகழை உச்சிக்குக் கொண்டு போகின்ற செயலைத் தமிழ் நாட்டுப் பெருமக்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

நாயுடு, நாயக்கர், முதலியார்—நாயுடு என்பது வரதராசலு (நாயுடு) அவர்களைக் குறித்திடும்; நாயக்கர் என்பது தமிழினத்தின் தன்மானத் தலைவர் ஈ. வே. இராமசாமி அவர்களைக் குறித்திடும்; முதலியார் என்பது தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களைக் குறித்திடும். தமிழ்த் தென்றல் திரு. வி. க. திருவாரூர் வி. கலியாண சுந்தரனார். திருவாரூர் அவர் பிறந்த ஊரென்று இங்குப் பலராலும் பேசப்பட்டதென்றாலும், திருவாரூர் அவருடைய மூதாதையர் பிறந்த ஊர். அவர் பிறந்த ஊர் செங்கற்பட்டு மாவட்டத்திலே உள்ள துள்ளம் என்கின்ற சிற்றூராகும். அந்தச் சிற்றூரிலேதான் அவர் பிறந்தார். இருந்தாலும் திருவாரூர் அவர் பெயரோடு இணைந்து வந்துவிட்ட காரணத்தால் அவர் திருவாரூரில்தான் பிறந்திருக்க வேண்டும் என்று பலரும் கற்பனை செய்து கொண்டார்கள். திருக்குவளையிலே பிறந்திருந்தாலும் திருவாரூர்க்காரென்று என்னை அழைப்பதைப்போல்! தவறு இன்றைக்கு நடந்ததன்று; திரு.வி.க. காலத்திலேயே நடந்திருக்கிறது [சிரிப்பு.]

இப்படி, துள்ளம் என்கின்ற சிற்றூரிலே பிறந்தவர் இளமைக் காலத்திலே நோய் கொண்டு, அந்த நோய் நீங்குவதற்கான

பல்வேறு மருத்துவ முறைகளையெல்லாம் கொண்டு, இந்தக் குழந்தையும் நீண்ட காலம் வாழுமா என்ற கவலைக்கிடையே, அவருடைய பெற்றோர் முயற்சிகளை மேற்கொண்டு, அதற்குப் பிறகு நோய் நீங்கப்பெற்று, அதன் பின்னர் தாய் தந்தையரை இழந்து, அதன் பின்னர் வெள்ளைக்காரனுடைய அலுவலகத்திலேகூட ஓர் அலுவலாளராகப் பணி செய்யும் பொறுப்பேற்று, அதற்குப் பிறகு, தமிழ் ஏடுகளைப் படித்தல், இந்தியத் தன்னுரிமைப் போராட்டத்திலே தம்மையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்கின்ற ஆர்வம் கிளர்ந்தெழுந்த காரணத்தினால் அதிலே தம்மை இணைத்துக் கொள்ளல், 'தேசபக்தன்' 'நவசக்தி' போன்ற நாளிதழ்களை நடத்துதல், தனித் தமிழில் அந்தத் தாள்களைத் தமிழர்களின் கைகளில் வழங்குதல்—போன்ற பெரும் பொறுப்புகளைத் திரு.வி.க. ஏற்றுக் கொண்டார்கள்.

அன்றைக்கு அவர் நடத்திய 'நவசக்தி' உண்மையை உலகுக்கு உரைத்த 'நவசக்தி'. அன்றைக்கு அவர் நடத்திய நவசக்தி தமிழ் துள்ளுகின்ற நவசக்தி. அன்றைக்கு அவர் நடத்திய நவசக்தி, தமிழினத்தின் கேடயமாய், தமிழ்ப் பகையை எதிர்க்கின்ற போர் வாளாய் விளங்கிய நவசக்தி. அந்த நவசக்தியைத் தம்முடைய மகளென்றும், தேசபக்தனைத் தம்முடைய மகனென்றும் திரு.வி.க. அவர்கள் அழைத்தார் என்று அவருடைய வரலாற்றுக் குறிப்புகள் நமக்கு உரைத்துக் கொண்டிருக்கின்றன.

அந்தப் பெரியவர் இன்றைக்கு இல்லாவிட்டாலும் அவர் யாத்த நூல்கள் அவர் உருவாக்கிய பனுவல்கள் அவர்கள் வடித்தெடுத்த கட்டுரைகள்—இவையெல்லாம் திரு.வி.க. அவர்களின் உருவமாக நமக்குத் தோற்றமளிக்கின்றன. அவர் கூறியதாக இங்கே வெளியிடப் பெற்றுள்ள மலரில் ஒரு வரியை நான் படித்தேன். "என்னுடைய புகைப்படங்கள் நிழற்படங்கள் இவையல்ல எதிர்காலத்திலே என்னைக் குறிப்பவை. நான் எழுதியுள்ள நூற்படங்கள்தாம் என்னை உலகத்திற்குக் காட்ட இருப்பவை" என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். பெண்ணுரிமைக்காகப் போராடியவர்கள் திரு.வி.க. அவர்கள். நாட்டுரிமைக்காகப் போராடியவர்கள் திரு.வி.க. அவர்கள். மொழி உரிமைக்காகப் போராடியவர்கள் திரு.வி.க. அவர்கள். இங்கே பேராயம் பேராயம் என்று பலரும் வழங்கினார்களே—எங்கே பேராயத்தின் பொருள் உங்களுக்கு

விளங்காதோ என்ற ஐயத்தின் காரணமாக நம்முடைய பாவாணர் அவர்கள் இடையிடையே 'காங்கிரசு' என்கின்ற சொல்லையும் இணைத்தார்களே—அந்தப் பேராயத்திலே இருந்து தம்முடைய இறுதிக் காலத்திலே திரு.வி.க. அவர்கள் தம்மை விடுவித்துக் கொள்ளுவதற்குரிய காரணம்—மொழிக்கு வருகின்ற தீங்கைத் தடுப்பதற்கில்லாத ஓர் இயக்கம்—அது பேராயமாக இருக்க முடியாது; 'பேரபாயமாக'த்தான் இருக்க முடியும்; ஆகவே நான் விலகிக் கொள்ளுகிறேன்' என்று கூறினார்கள்.

கடலூரில் நடந்த மாநாட்டில்—திராவிடர் இயக்க மாநாட்டில் திரு.வி.க. அவர்கள் அழுத்தத் திருத்தமாகச் சொன்னார்கள். "தமிழ் மொழி காப்பாற்றப்பட முடியாது என்கின்ற நிலை பிறக்குமேயானால், என் தமிழுக்கு, என்னை வளர்த்த தமிழுக்கு, நம்முடைய அன்னைத் தமிழுக்கு—தீங்கு மேலிடத்திலிருந்து வருமேயானால், அப்படிப்பட்ட நிலையை எதிர்ப்பதற்கு ஏன் நம்முடைய நாடு தனியாகப் பிரியக் கூடாது. என்கின்ற இந்தக் கேள்வியைக்கூட அன்றைக்கு எழுப்பினார்கள். (கைதட்டல்) அதைத் தொடர்ந்து சென்னை மாநகரத்திலே நடைபெற்ற கோகலே மண்டபத்தின் கூட்டத்தில், அதுதான் அவர் பேசிய கடைசி அரசியல் பேச்சாக இருக்குமென்று கருதுகின்றேன் —1849-ஆம் ஆண்டு என்று கருதுகின்றேன்—சிதம்பரனார் பற்றிய விழா அது-அந்த விழாவிலே பேசிய நேரத்திலே திரு.வி.க.வே தாம் கடலூரிலே பேசிய பேச்சைச் சுட்டிக்காட்டி, "நான் கடலூரிலேயே அழுத்தந் திருத்தமாகச் சொல்லியிருக்கின்றேன். ஆகவே இன்றைக்கும் சொல்லுகின்றேன். தமிழ் வாழ, தமிழினம் வாழ, தமிழர்கள் மேன்மையுற, தமிழ்நாடு தமிழருக்கே ஆக வேண்டும்" என்று கூறித் திரு.வி.க. முடித்தார்கள். [பெரிய அளவில் கைதட்டல்].

இன்றைக்கு இந்தக் கருத்துகளை நாம் ஏற்றுக் கொள்கிறோமா? அது வேறு செய்தி. ஒருவேளை பெருஞ்சித்திரனார் ஏற்றுக் கொள்ளலாம். எனக்கு இன்றைக்கு அது ஒப்பிய கருத்து இல்லை. ஏனென்றால் இந்தியாவுக்குப் பொதுவான ஏதங்கள் [ஆபத்துகள்] பல நேரங்களிலே கூடுகின்றன என்பதை எண்ணுகின்ற நேரத்திலும், இந்தியாவுக்கு வலிவான பாதுகாப்புத் தேவை, ஒருமைப்பாடு தேவை என்பதை உணர்ந்த நேரத்திலும், என்னை

ஆளாக்கிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டு, இந்திய ஒருமைப்பாடு, அதில் நம் மாநில உரிமைகள், என்கின்ற வகையிலே, புதிய முழக்கத்தை எங்களுக்குத் தந்தார்கள். ஆக, மாநிலத்தினுடைய உரிமைகள் விரைவாக நிலைநிறுத்தப்பட வேண்டும். அழுத்தந் திருத்தமாய் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதற்குத் திரு.வி.க. அவர்களின் சொற் பொழிவுகள் முன்னோடியாக இருந்திருக்கின்றன என்பதற்காகத் தான் இதனை எடுத்துக் காட்டினேன். செய்தித்தாள் வரைவாளர்கள் வந்திருக்கிறார்கள். கருணாநிதி மறுபடியும் திரு.வி.க.வைச் சான்றுக்கழைத்துப் பிரிவினை கேட்டான் என்று எழுதவும் கூடும். ஆனால், நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுவேன். இன்றைக்கு நாங்கள் கேட்கின்ற உரிமைக்கு நாங்கள் கேட்கின்ற அதிகாரங்களுக்கு—அன்றைக்குத் திரு.வி.க. அவர்கள் முத்திரை குத்திவிட்டுப் போய்விட்டார் என்பதற்காகத்தான் நான் இவற்றைச் சொல்லுகின்றேனேயல்லாமல், பிரிவினை எண்ணத்தோடு இவற்றை நான் சொல்லவில்லை என்பதை அச் செய்தி வரைவாளர்களுக்கு நான் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

திரு.வி.க, அவர்களைப்பற்றி, அவர் மறைந்த பிறகு பெரும் புலவர்கள், தமிழ் அறிஞர்கள் அனைவரும் அழகழகான கட்டுரைகளை எழுதியிருக்கின்றார்கள். திரு.வி.க. அவர் வாழ்ந்த காலத்தில் மறைந்துவிட்ட வீரர்களுக்கு -கடமையாளர்களுக்கு - தலைவர்களுக்கு அவரெழுதிய இரங்கற்பாக்கள், அவரெழுதிய துயரக் கட்டுரைகள்— இவையெல்லாம் படிக்க படிக்க மறைந்தவர்கள் மறைந்து எத்தனையோ ஆண்டுக் காலமானாலும், இன்றைக்கும் நம் கண்களைக் குளமாக்கக்கூடிய எழுத்துகள் திரு,வி.க. அவர்களின் எழுத்து களாகும்.

நீண்ட நெடிய சொல்தொடர் அமைப்புகளை விடுத்து, திரு.வி.க அவர்கள் சுருங்கச் சொல்லி, விளங்க வைக்கின்ற வகையில், ‘கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தி, குறுகத்தரித்த குறள்’ என்பார்களே, அதே போல் திரு.வி.க. அவர்களுடைய கட்டுரைகளில்-எழுத்துகளில் அவ்வளவு கருத்துகள் இருப்பதைக் காணலாம். அந்தத் திரு.வி.க. அவர்களைப்பற்றி,

*மலிஇரு பத்தைந் தாண்டாய்*
*வண்டமிழ் நாட்டி லேநம்*

*கலியாண சுந்திரர்தம்*
*தொண்டுகள் கண்டு வந்தேன்.*
*எலியெனப் புலவர் வீட்டில்*
*இருக்கையில், சுந்தரர்தாம்*
*புலியென வெளியில் போந்தார்*
*முதல்முதல் அரசியற்கே!*

—என்று பாரதிதாசன் பாடுகிறர். இங்கே பேசுகையில் குறிப்பிட்டார்கள். அரசியல் மேடையில் தமிழுக்கு அரியணை போட்டுத் தந்தவர் திரு.வி.க. என்று. ஆம்! அஃது எங்கே தெரியுமா? 1918ஆம் ஆண்டு இதே தஞ்சை மண்ணிலேதான் திரு.வி.க. அவர்கள் அரசியல் கட்சி மாநாட்டில் இந்தத் தீர்மானத்தையே கொண்டு வந்தார்.

'இனிமேல் அரசியல் கட்சி மேடையிலே பேச வருபவர்கள் தமிழிலேதான் பேச வேண்டும். வேறு மொழியிலே பேசினுல், அவர்களைப் பொதுமக்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்' —இந்த வகையிலே திரு.வி.க. அவர்கள் தஞ்சையிலே நடைபெற்ற அரசியல் மாநாட்டில் இந்தத் தீர்மானத்தையே கொண்டு வந்து விளக்கவுரையாற்றினுர்கள் 1918-ஆம் ஆண்டில். ஆகவே அதற்கு முன்பெல்லாம் அரசியலை ஆங்கிலத்திலே பேசினுல்தான் மதிப்பு.

நம்முடைய பாவாணரவர்கள் கூடச் சொன்னுர்கள் நமக்குத் தமிழ்; உலகத் தொடர்புக்கு ஆங்கிலம்—என்று! நான் உலகத்தில் பல்வேறு நாடுகளைச் சுற்றிப் பார்த்த நேரத்தில், உலகத் தொடர்புக்குக் கூட ஆங்கிலம் தேவைதாஞ என்ற கேள்வி என்னுடைய உள்ளத்திலே எழுந்தது. நான் இந்தக் கேள்வியை உங்களுடைய மனத்திலே பதிய வைக்கின்ற காரணத்திஞல், ஆங்கிலம் தேவையில்லை என்று வழக்காடுகின்றேன் என்று யாரும் கருதிக் கொள்ளக்கூடாது. இந்தியாவிலே மாநிலத்திற்கு மாநிலம் தொடர்புகொள்ள-இந்தியாவிலிருக்கிற பதினுன்கு மொழிகளும் தேசிய மொழிகளாக ஆக்கப்படுகிற வரையில் ஆங்கிலம் நடுவணரசிலே நீடித்திருக்கும் என்பதுதான் பேரறிஞர் அண்ணு அவர்கள் மாநிலப் பேரவையிலே குறிப்பிட்ட செய்தியாகும். அதுதான் அண்ணு அவர்களால் தமிழ்நாட்டு மக்களுக்குத் தரப்பெற்ற கொள்கையுமாகும். பதினுன்கு மொழிகளும் தேசிய மொழிகளாக ஆகின்ற நிலை வரையில் ஆங்கிலம் நடுவணரசின் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் என்பது.

உலகத்தில் பல்வேறு நாடுகளுக்குச் சென்று பார்க்கும்பொழுது நான் முதன் முதலாக உரோமாபுரிப் பட்டினத்தில் உள்ள இத்தாலி நாட்டிற்குச் சென்றபொழுது; ஓர் ஆங்கில ஏடு வாங்கிப் படிக்கலாம் என்று கடைகளிலே சென்று ஆங்கிலச் செய்தித்தாள் இருக்கின்றதா என்று கேட்டபொழுது, எழுத்துகளைப் பார்த்தபொழுது என்னவோ ஆங்கிலம் போலத்தான் இருந்தன—ஆனால் அவை ஆங்கில வரிவடிவங்களை ஒத்திருக்கின்ற எழுத்துகளே அல்லாமல் ஆங்கில எழுத்துகளல்ல; அவர்களுடைய மொழியிலேதான் அங்குச் செய்தித்தாள் விற்றது. உலகப் பொதுமொழி என்று சொல்லப்படுகின்ற ஆங்கில மொழியில் ஒரு செய்தித்தாளைக் கூட என்னால் அங்குக் காண முடியவில்லை. அங்கிருக்கின்றவர்களுடன் உரையாடுகின்ற நேரத்திலே கூட, அவர்கள் ஆங்கிலத்திலே பேசுவார்கள் என்று எதிர்பார்த்து நான் ஆங்கிலத்திலே அவர்களிடம் பேசினால், அவர்கள் விடைக்கு ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தாமல் அவர்களுடைய நாட்டு மொழியைத்தான் பயன்படுத்தினார்கள். ஆக, நான் பேசுகின்ற ஆங்கிலத்திற்கு ஒரு மொழி பெயர்ப்பாளர், அவர்கள் பேசுகின்ற இத்தாலி மொழிக்கு ஒரு மொழி பெயர்ப்பாளர் என்று இடையிலே இரண்டு மொழி பெயர்ப்பாளர்களை வைத்துக் கொண்டு தான் என்னால் பேச முடிந்தது. அவ்வாறே பிரான்சு நாட்டிலும், அதுபோலவே செருமானிய நாட்டிலும் இந்தத் தொல்லையிருப்பதை உணர முடிந்தது. ஆகவே ஆங்கிலம் இன்றைக்கு உலகத்திலே இருக்கின்ற அரசுகளுக்கிடையில் தொடர்பு கொள்ளக் கூடிய ஒரு ஒரு மொழியாக இருக்கலாமே தவிர, அதுவே உலகத்திலிருக்கின்ற எல்லா மக்களாலும் பேசப்படுகின்ற ஒரு மொழியாக இல்லாமல் இருக்கின்றபொழுது-அவ்வளவு பெரிய ஆங்கிலம்-பாவாணரவர்கள் சொன்னதைப்போல், முன்னொரு காலத்தில் இருபத்து மூவாயிரம் சொற்களாக விருந்து,—இப்படி மூன்று இலக்கம் நான்கு இலக்கம் சொற்களாகப் பெருகியிருக்கின்ற அந்த ஆங்கிலமே, உலகத்திலே பொது மொழியாக இல்லாமலிருக்கின்ற இந்த நேரத்தில், இன்னமும் பல்வேறு சொற்கள் கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்தி மொழி, இந்தியாவினுடைய பொது மொழியாக எப்படி ஆக முடியும்? கேட்டால் பிறகு விடை சொல்லுகிறார்கள் 'அது பெரும்பாலான மக்கள் பேசுகின்ற மொழி ஆகவே அது பொதுமொழியாக இருக்கத் தகுதியுடையது' என்று.

அதற்கு அண்ணு அவர்கள் அழகாக விடை சொன்ஞர்கள். “பெரும்பாலான மக்கள் பேசுகின்ற மொழி பொதுமொழியாஞல், தேசிய மொழியாஞல், நான் உங்களைக் கேட்கின்றேன், நடுவணரசை நடத்துகின்றவர்களே, நீங்கள் மயிலைத் தேசியப் பறவையாக ஆக்கியிருக்கிறீர்கள்; அது இந்தியாவிலே பெரும்பாலான பறவையன்று; குறைந்த எண்ணிக்கையுடைய பறவைதான். அதைத் தேசியப் பறவையாக ஆக்கியிருக்கிறீர்கள். இந்தியாவிலே பெருமளவுக்கு இருக்கிற பறவை காக்கைதான். அதை நீங்கள் தேசியப் பறவையாக ஆக்கிஞல் இந்தியைத் தேசிய மொழியாக ஆக்குவதிலே பொருளுண்டு” என்று அண்ணு அவர்கள் இடித்துரைத்தார்கள். ஆகவே பெரும்பாலான மக்கள் பேசுவதால் மாத்திரம் அன்று; அதற்குரிய இலக்கணம், இலக்கியச் செறிவு, வரலாறு, அதற்குரிய பொருண்மை இவையெல்லாம் ஆராயப் பெற்ற பிறகுதான் ஒரு மொழிக்குரிய இடம் கிடைக்க முடியும். அப்படிப்பட்ட எல்லா வகைச் சிறப்புகளும் பொருந்தியது, நம்முடைய தமிழ்.

நான் பேராசை கொண்டு நம்முடைய தமிழே இந்தியாவினுடைய தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. தமிழைச் சிதைக்காமலிருக்கவே நாங்கள் கேட்டுக் கொள்கிறேம். கேட்டுக் கொள்ளுகிறேம், வேண்டுதலாக. வேண்டுதலை முறையீடாக; எச்சரிக்கையாக; போராடித்தான் பெற வேண்டும் என்கின்ற நிலையுடையதாக ஆக்காமலிருக்க வேண்டிய பெரும் பொறுப்பு நடுவண் பேரரசுக்கு இருக்கிறது. இன்றைக்குத் தமிழகத்திலே இந்திக்கு அலுவலில்லை என்று நாம் சட்டப் பேரவையிலே தீர்மானம் நிறைவேற்றி விட்டோம் என்ருலும், மெல்ல மெல்ல கதவிடுக்கிலும்-பலகணி இடுக்கிலும்—சந்து முனையிலும் எப்படியாவது உள்ளே நுழைந்துவிட வேண்டுமென்று, கூட்டத்திலே மூடிச்சவிழ்க்க முனைபவனைப்போல், இந்திமொழி தமிழகத்திலே நுழையத் துடித்துக் கொண்டிருக்கின்ற காலம் இது. இதைத் தடுத்து நிறுத்தக்கூடிய வல்லவர்கள், நல்லவர்கள், இன்றைக்குத் தமிழ்க் குமுகாயத்திற்கு நிரம்பத் தேவை. அந்தத் தமிழினத்தினுடைய போர் முழக்கமாகத்தான் இங்கே பாவரங்கம் நடைபெற்றது; நம்முடைய பாவாணரவர்களுடைய சொற்பொழிவு இங்கே நடைபெற்றது. அடிகளாருடைய அறிவுரைகளைக் காலையிலிருந்து இது வரையிலே நீங்கள் கேட்டு மகிழ்ந்திருக்கின்றீர்கள்.

பாவாணர் அவர்கள் சொன்னார்கள். தமிழுக்கு இன்னுஞ் சிறப்புச் செய்ய வேண்டுமென்று, அவர்கள் ஒரு பெரு முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். நான்கு இலக்கத்திற்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்களைக் கொண்டு ஒரு பேரகரமுதலி—தொகுத்துக் கொண்டிருக்கின்ற ஒரு பெரு முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அதற்கு அரசினுடைய உதவியையும் கேட்டிருக்கின்றார்கள். கிட்டத்தட்ட இரண்டு இலக்க உருபாய் அதற்குச் செலவாகும் என்று மதிப்பிடப் பெற்றிருக்கின்றது. இந்த அரசு தமிழரசு. தமிழர்களால் தமிழர்களுக்கு நடத்தப்படுகின்ற அரசு. பாவேந்தர் பாரதிதாசன் சொன்னதைப்போல், தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டின் அமைச்சகத்தில் இருக்க வேண்டும் என்பதற்கேற்ப இருக்கின்ற அரசு. எனவே நான் பாவாணருக்கு உறுதி சொல்லுவேன்; அவருடைய முயற்சி வென்றிட, தமிழக அரசு எல்லா வகையான உதவிகளையும் தரும் என்று இந்த திரு.வி.க. விழாவிலே நான் எடுத்துக்கூறி இந்த அளவிற்கு நான் உங்களிடத்திலேயிருந்து விடைபெற்றுக் கொள்கின்றேன்; வணக்கம். (நீண்ட நேரக் கைதட்டல்) O

---

## செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகம்.

செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகத்தில் சேர்வதற்கு விளக்கம் வேண்டியும், பங்குகள் கேட்டும் அன்பர் பலரிடமிருந்தும் மடல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இக் கூட்டுறவுக் கழகத்திற்கான அடிப்படை ஆக்க முயற்சிகளும், சட்ட நெறிமுறை வரைவுகளும், பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் முறைப்படி மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. அதன்பின் விரிவான அறிக்கைகள் வெளியிடப் பெறும். அதற்குள் தங்கள் பங்குத் தொகையினை விடுக்க விரும்பும் அன்பர்கள், தாம் எடுத்துக்கொள்ள விரும்பும் பங்குகளுக்கான தொகையுடன் சேர்ப்புக் கட்டணம் ஓர் உருபாவும் சேர்த்துத் தம் முழு முகவரியுடனும் விளக்கத்துடனும் 'தென்மொழி' சென்னை-5 என்னும் முகவரிக்கே விடுத்து வைக்கவும். ஒரு பங்கு ஓர் உருபா. ஒருவர் எத்தனைப் பங்குகள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். தேவையான பங்குகள் விரைந்து நிறைவாகி வருகின்றமையால் அன்பர்கள் முந்திக் கொள்வது நல்லது.

25—9—74
சென்னை-5.

பெருஞ்சித்திரன்.
அமைப்பாளர்.

# மறைமலையடிகளாரின் செய்யுள் மாண்பு!

—பெருஞ்சித்திரன்.

(மறைத்திரு மறைமலையடிகளாரின் 98-ஆம் பிறந்த நாள் நினைவாக, 31-8-74 மாலை, சென்னை-1 மறைமலையடிகள் நூல் நிலையத்தின் வள்ளலார் திருவருள் மண்டபத்தில், மொழிப் பேரறிஞர் பாவாணர் தலைமையில், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக அமைச்சர் தாமரைத்திரு வ. சுப்பையா அவர்களால் ஏற்பாடு செய்யப் பெற்ற விழாக் கருத்தரங்கில் படிக்கப் பெற்ற கட்டுரை).

இவ்வுலகின்கண் தோன்றி வழங்குகின்ற மொழிகள் எல்லாவற்றுள்ளும் செய்யுள், உரை என்னும் இருவகை நடை வழக்குகள் உண்டு. எழுத்து முறைக்கு மட்டுமின்றிப் பேச்சு முறைக்கும் இவ்விரு வழக்குகளும் பொருந்தும். செய்யுள் என்பது இனிமையும் இசைமையும் வாய்ந்து விளங்கும் குறைந்த சொற்களால் நிறைந்த உணர்வும் கருத்தும் பெறவகைக்கும் ஒரு மொழி முறையாகும். உணர்வு நிலை முற்றித் தோன்றுமிடத்து இஃது இயல்பாக வெளிப்படும் தன்மையதாகும். உரையென்பது நிறைந்த சொற்களால் பரந்து சொல்லும் ஒரு மொழி முறையாகும். அறிவுநிலை முற்றித் தோன்றுமிடத்து இஃது அரிய முயற்சியால் செயற்கையாக வெளிப்படும் தன்மையதாகும். இவ்விரு வழக்குகளும் நம் செந்தமிழ் மொழிக்கண் சொற்செப்பம் பொருட் செப்பம் முதலியன செறியத் தோன்றி வளர்ந்து விளங்குகின்றன. பொதுவாக ஒரு மொழியை ஒருவர் அறிந்து கொள்வது வேறு; அம்மொழியில் அறிவு பெறுவது வேறு. இனி, மொழியறிவு பெற்று முதிர்ந்த உணர்வினருள்ளும் புலமைத் திறன் பெறுதல் என்பது தலைசிறந்த தொன்றாகும்.

## கருத்து வெளிப்பாட்டின் முந்நிலைகள் :

சிறப்பாக, நாம் வெளிப்படுத்துகின்ற கருத்துகளை மூன்று நிலைகளாகப் பகுக்கலாம். ஒன்று எண்ணுநிலை; இரண்டு எழுச்சி நிலை; மூன்று வெளிப் பாட்டுநிலை என்பன அவை. தொடக்கத்தில் முதற்கண் அகப்புலன் வழியாகவோ புறப்புலன்கள் வழியாகவோ ஒரு பொருளைப்பற்றிய உணர்வு நம் உள்ளத்தே குவிகிறது. பின்னர் அவ்வுணர்வு முருகத் தொடங்கி ஓர் எண்ணு வடிவம் பெறு

கின்றது. இந்நிலையையே எண்ணு நிலை எனலாம். இவ்வெண்ணு நிலையில் நாம் புலன்கள் வழிப்பெற்ற உணர்வின் முழுவடிவமும் சரிவர செறியத் தோன்றுது. திசைக்கொன்றுகப் பரந்தும் சிதைந்தும் குறைந்தும் மறைந்தும் தோன்றும் கருத்துச் சிதறல்களாக அவை அக்கால் புலப்படும். அந்நிலையின் மேல் நம் அறிவு செயற்படாமல் நிற்கும் நிலையும் அது. அதன்பின்னரே, அறிவுணர்வு துவியத் தோன்றி, அக்கருத்துச் சிதறல்களை ஒருங்கு கூட்டவும், இனம் பிரித்து வகைப்படுத்தவும், குறைவன கூட்டவும், கூடுவன குறைக்கவும் ஆகிய ஓர் ஒழுங்கு முறையில் அவற்றை உள்ளத்தே திரளச் செய்து குவிக்கின்றது. அம்முயற்சி, அக்கருத்துக் குவியல்களை வெளிப்படச் செய்யும் வரை நடைபெறுகின்றது. இதுவே எழுச்சி நிலையாகும். அடுத்து, உள்ளத்தான் கிளர்ந்து அறிவான் மலர்த்து விக்கப்பெற்ற கருத்துகள் முதிர்ந்து, பழுத்துச் சொல்வடிவாகவோ எழுத்து வடிவாகவோ புறத்தே வெளியிடப் பெறுகின்றன. இந் நிலையே வெளிப்பாட்டு நிலையாகும்! இம் மூன்று நிலைகளும் வித்து நிலையும், வளைவு நிலையும், முதிர்வு நிலையும் போலவாம் என்க. ஆனல் உள்ள நிலத்தின் நடைபெறும் இம்மூவகை நிலைகளுக்கும் மூவகை உணர்வு நிலைகள் வேண்டும். எண்ணு நிலைக்கு உள்ளுணர்வும், எழுச்சி நிலைக்கு நல்லறிவும், வெளிப்பாட்டு நிலைக்கு மொழித் திறனும் வாய்க்கப் பெறுதல் வேண்டும். இம் மூன்று நிலைகளுள் ஒரு நிலையிலேனும் குறைவோ சிதைவோ தோன்றினும் வெளிப்பாட்டு நிலை சிறப்புற அமையாது. உள்ளுணர்வு முதிர்வுற வாயாவிடத்து வெளிப்படுகின்ற கருத்துகளில் இயல்பும், உணர்வுத் தெளிவும், ஆழமும், மிகுபயனும் இரா. எழுச்சி நிலைக்கேற்ற நல்லறிவு முதிரத் தோன்றுவிடத்து வெளிப்படுகின்ற கருத்துகளில் அறிவும், உலகியல் பரப்பும், கூர்மையும் இரா. இனி, மூன்றுவது நிலையாகிய வெளிப் பாட்டு நிலைக்கேற்ற மொழித்திறன் பெறுதவிடத்து, முருகித் தோன்றும் கருத்துகளில் முனைமழுக்கமும், உணர்வுக் குறைவும், அறிவுக் கலக்கமும், எழில் ஈர்ப்புக் குறைவும் மிகுந்து, பயன் கொளுவ விரும்புவார்க்கு ஒருவகை வெறுப்பும் தோன்று நிற்கும். எனவே, ஒரு மொழியின் இருவகை வழக்கும் சிறப்புறுதல் வேண்டின், அம்மொழி வழங்கும் மக்களிடை இம்மூவகை உணர்வு நிலைகளும் நன்கு வளர்ச்சியுறுதல் வேண்டும். அன்றேல், மொழியின் வளர்ச்சி நிலை குன்றித் தேய்ந்து சிதைந்து போகும்.

### செய்யுளும், உரைநடையும் அவற்றின் மூவகைப் பிரிவும்:

இனி இயற்கையும் எழிலும் சிறந்து விளங்கும் நம் இனிய நறுந்தமிழ் மொழியில் செய்யுள் யாப்பதும் உரைநடையெழுதுவதும் பலவகையிலும் சிறந்து விளங்கித் தோன்றி வளர்ந்து வருகின்றன. ஓரோவொருகால் ஓரோவோரிடத்து இத்துறையில் சில தொய்வு களும் இழிவுகளும் புலப்பட்டாலும், அவை காலத்தால் நெருக்கப் பெற்றுக் கட்டழிந்து போவது கண்கூடாக விளங்குகின்றது. அவ்வக்கால், ஏற்படும் அவ்வெழுச்சித் தலைக்கூடலை ஆங்காங்குத் தோன்றும் மெய்ந்நெறியாளர்கள் பொருதிப் பொன்றச் செய்தே வரு கின்றனர். எனவே, செந்தமிழ்த் தூய்மை விரும்பும் நன்னெறி யாளர்கள் அந்நிலைகளால் நெஞ்சங் கவலுதலும், கவன்று கையற்றுச் சோர்தலும் வேண்டா என வேண்டிக் கொள்கின்றோம்.

இனி, முந்துநிலை மொழியாகிய நம் செந்தமிழ் மொழிக்கண், பண்டுதொட்டே வாழ்ந்திருந்த நம் முனிவோரும் பொய்யாநாவின் புலவோரும்,செய்யுளையும் உரையையும் ஒரு வகையாக நெறிப்படுத்தி இயல் என்றும், செய்யுளை மட்டும் இசை வரம்பாக நெறிப்படுத்தி இசையென்றும், இவ்விசையையும், உரையையும் உலகியல் முறை யான் ஒரு வகை நெறிப்படுத்தி நாடகம் என்றும் பகுத்து உரைக்க லாயினர். உலக மொழிகள் பெரும்பாலானவற்றுள் இம் மூவகை மொழிப் பகுப்புகளும் கையாளப் பெற்றாலும், நம் செந்தமிழ் மொழி யிலேயே இப்பகுப்புகள் மிகச் சிறப்பாக சிதைக்கவியலா மொழிக் கூறுகளாக விளங்கித் தோன்றி இம்மொழியையே முத்தமிழ் என்று வியந்து பேசுமாறு செய்துள்ளதை அறிஞர் உணர்வர்.

### அடிகளாரின் செய்யுள் உரைநடை ஈடுபாடு:

இனி, இம் முத்தமிழ்த் துறையினும் தலைசிறந்து விளங்கிய புலவோர் பலராவர். அவருள் இவ்விருபதாம் நூற்றாண்டில் தலை சிறந்து விளங்கிய திறவோர் நம் மறைத்திரு. மறைமலையடிகளார் ஆவர், அவரியற்றிய இயற்றமிழ், நாடகத்தமிழ் நூல்கள் பல. அவற்றுள் அவர் செய்யுள் வடிவாக எழுதிய சில நூற்களை அறிவு முறையான் ஆய்கிறது இக்கட்டுரை.

உயர்திரு மறைமலையடிகளார் உலக முன்மொழியும் தென் மொழியுமாகிய தமிழிலும், ஆரிய வடமொழியாகிய சமற்கிருதத் திலும், மேலையாரிய மொழியும் ஐரோப்பிய மொழியுமாகிய ஆங்கிலத்

துள்ளும் மிகு புலமை பெற்று விளங்கிய பெரும் புலவோர் ஆவர். அவர் தம் கழியிளமைப் பருவத்திலேயே நம் செந்தமிழ் மொழிக்கண் முற்றிய இலக்கண இலக்கிய புலமை பெற்று முதிர்ந்து விளங்கிய புலவோராக விளங்கினர். அவர் தம் தமிழ் இலக்கண இலக்கியப் புலமைபற்றித் தாமே விளக்கும் உரைகள் இவை:

*"எமக்கு ஆண்டு உக; மிக இளைஞனுயிருந்த காலம்;... அந்நாளில் யாம் பழைய தமிழ் இலக்கண இலக்கிய நூற்பயிற்சியில் மட்டுப்படா விழைவு கொண்டு கருத்தூன்றியிருந்தோம். எமது பதினைந்தாம் ஆண்டில் முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சியானது எமது இருபத்தோராம் ஆண்டிற் பெரும்பாலும் நிரம்பியதென்னலாம்; இருபத்தோராம் ஆண்டிற்குள் தொல்காப்பியம், திருக்குறள், திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் மூன்று நூல்களையும் முழுதும் நெட்டுருச் செய்து முடித்தோம்; கலித்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், நாலடியார், முதலிய நூல்களிற் பெரும்பகுதிகள் அங்ஙனமே நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டன; இவையேயன்றி, நன்னூல் விருத்தி, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, யாப்பருங்கலக்காரிகை, இறையனாரகப் பொருளுரை, தண்டியலங்காரம் முதலான நூல்களும் முன்னமே நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டனவாகும். கல்லாடம், சீவகசிந்தாமணி, பெரிய புராணம் என்னும் நூல்களின் சொற்சுவை பொருட்சுவைகளிற் பெரிதும் மூழ்கியிருந்தும் அவற்றிலெடுத்துப் பாடஞ் செய்த செய்யுட்கள் மிகுதியாயில்லை. என்றாலும் அவற்றின் சொற்பொருள் நயங்கள் எமதுளத்தில் வேரூன்றி நின்றன. இங்ஙனமாக விழுமிய தமிழ்ப் பழநூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினாலேயே, செய்யுளும் உரையும் தனிச்செந்தமிழ் நடையில் எழுதுந் திறம் எமதிளமைப் பருவத்திலேயே எமக்கு வாய்ப்பதாயிற்று.*

(—முகவுரை. திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை)

—அடிகளாரின் இவ்வாய்மையுரையால் அவரின் கழியிளமைப் பருவத்திலேயே அவர் உள்ளம் எத்துணையளவு தமிழ்மொழிக்கண் ஆழ்ந்து கலந்து அளாவி நின்றது என்பதையும், அவர் அறிவு உலகியல் மாசு படாமல் அறிவுணர்ச்சியிலும் ஊக்கத்திலும் எவ்வாறு முனைந்து முருகி நின்றது என்பதையும் நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். பொதுவாகவே இற்றைநாள் இளைஞர்களுக்குத் தமக்குப் பாடமாக வாய்க்கப்பெற்ற ஓரிரு நூற்பகுதிகளில் உள்ள ஓரிரு செய்யுள்கள் தாமும் மனப்பாடம் செய்து கொள்வது மிகவும் கடினமாயிருக்கின்ற தன்மையினையும், அடிகளார் தம் இருபத்

தோன்றும் அகவையிலேயே அருந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றை யும் இலக்கண நூற்கள் சிலவற்றையும் அகப்படுத்திக் கொண்ட தன்மையினையும் ஒப்பவைத்துப் பார்ப்பார்க்கு, அடிகளார் இயற்கை யிலேயே எத்துணைப் புலமையுணர்வும் அறிவும் வாய்க்கப் பெற்றார் என்பது மிகவும் வியப்பூட்டுகின்ற செய்தியாகும். மிகப் பெரும் புலவோர் என்று பாராட்டப் பெறுவோர் தாமும், முந்தைய இலக்கண இலக்கியப் பயிற்சியில் ஓர் எள் மூக்கத்துணையும் வாயாதிருக்கப் பெறும் இந்நாளில் ஓர் இளைஞர் தம் பருவ எழுச்சிகளால் மனம் அலைவுண்டு திரிகின்ற இளம் பருவத்தில் இத்துணையளவு புலமை நிரம்பப் பெற்றார் என்பது எத்துணையளவு மகிழ்ச்சியையும் மதிப்பை யும் அடிகளார் பால் நமக்கு ஏற்படுத்துகின்றது! இவ்விளமைப் பருவத்து நூற்பயிற்சியும் இலக்கிய ஆர்வமுந்தாம் அவரைக் கழகக் காலத்துப் பெரும் புலவருள் ஒருவராகக் கருதும் அளவுக்கு உயர்த்தி யிருக்கின்றன என்றால் அதில் வியப்பேது? இவ்விளமைக் காலத்துப் புலமைச் சுவடுகள் அவர் எழுதிய எல்லாவகை நூல்களுள்ளும் பரந்து பட்டு விளங்குகின்றன என்றாலும், அவரின் செய்யுள் நூல்களாக விளங்கும் ஓரிரு நூல்களுள்ளும் ஓரிரு தனிப்பாடல்களுள்ளும் மிகச் சிறந்து மலர்ந்து மணம் வீசுகின்றன. நிறைந்த புலவர் ஒருவரின் அடிநிலை வளர்ச்சி எத்தகையதாக அமைந்திருத்தல் வேண்டும் என்பதை அடிகளாரின் இளமைக்கால எழுச்சி நமக்கு அறிவுறுத்திக் கொண்டுள்ளது.

### செய்யுள், உரைநடை யிவற்றின் ஏற்ற இரக்கங்கள் :

இனி, இவ்விடத்து வேறோர் உண்மையினையும் நாம் அறிதல் வேண்டும். ஓர் அறிஞரின் முற்றிய புலமை அவர் கற்ற நூல்களால் நிறைவுற்று விளங்கி, அவர் எழுதும் நூல்களால் வெளிப்பட்டுத் திகழ்வதாகும். அவர்கற்ற நூல்களின் பரப்பு அவரெழுதும் நூல் களின் பரப்பை விட மிகவும் பரந்துபட்டு விளங்குதல் வேண்டும். அக்காலே அவர் நூல்கள் கற்பார்க்குப் போதுமான நிறைவளிக்க முடியும். ஒரு நூலாசிரியர் தம் புலமைச் செழிப்பால் தம் உணர்வு முதிர்ச்சிக்கும், அறிவு ஈட்டத்திற்கும் தக்கவாறு உரைநடையாலும் செய்யுளாலும் நூல்களை யாத்துத்தரல் முடியும். ஆனால் அவரெழுது கின்ற உரைநடை நூல்களைவிட அவரெழுதுகின்ற செய்யுள் நூல் களால்தாம் அவர் நூல்கள் நிலைப்பேறு எய்துதல் முடியும். இக் கருத்து இக்கால அறிவியல் வளர்ச்சிக்குப் பொருந்தாததுபோல் தோன்றினும், உளவியல் முறைப்படியும் இயற்கையான மாந்தவியல்

வரலாற்றுப் படியும் இக்கூற்று மிகச் சரியானதாகும். இவ்வாறு கூறுவதால் உரைநடை நூல்களையோ உரைநடையையோ தாழ்த்துக் கூறுவதாக எண்ணுதல் வேண்டா. உரைநடை நூல்களிலேயே அறிவியல் நெறிமுறைகள் சிறகார்ந்து விளங்குதல் முடியும். ஆனால் அவை மாந்தரின் துய்ப்புணர்ச்சிக்கு எருவாக மாட்டா. மாந்தரின் புற அறிவை அஃதாவது உலகியல் அறிவை வளர்ப்பதற்கு உரை நடை நூல்கள் இன்றியமையாத ஆற்றல் சான்றவை. அத்துறையில் செய்யுள் நூல்கள் பெரும் வகையில் பயன்தரமாட்டா. ஆனால் மாந்த வளர்ச்சிக்கே ஊற்றுக் கண்ணாக விளங்கி நிற்கும் அகவறிவைத் துலக்குவதற்குச் செய்யுள் நூல்களே நன்கு பயன்படுவதாகும். அவற்றால்தான் மாந்தர் உள்ளத்தை எளிதில் வளைத்து வயப் படுத்துவது இயலும். அதனைச் செப்பப் படுத்துவதும் நெறிப் படுத்துவதுங்கூட செய்யுள் நூல்களால்தாம் இயலும்.

இந்த நுட்பத்தை நன்கு உணர்ந்த தன்மையால்தான், நந் தமிழ் முனைவர்கள் தம் கருத்துகள் அனைத்தையும்-ஏன் அறிவு நூல் களைக்கூட-செய்யுள் வடிவாகவே தந்து போயினர். உலகின் பல மொழிகளிலும் இவ்வுண்மை முற்காலத்தில் நன்கு உணரப்பெற்ற தன்மைகள் செறிந்து விளங்குகின்றன. கிரேக்க உரோம இலக்கியங் களும் பழங்கால ஐரோப்பிய இலக்கியங்களும் செய்யுள் வடிவாக இயங்குவதும் இவ்வுண்மையை நமக்கு நன்கு புலப்படுத்தும். உரை நடை ஒரு மொழியினத்தவரின் புறத்தோற்றம் என்றால், செய்யுள் அவரின் அகத்தோற்றம் ஆகும். செய்யுளை ஒலி மாத்திரையான் உரைத்துக் காட்டவும் இயலும். உரைநடையை ஒலி மாத்திரையான் உரைக்க முடியாது. இக்கருத்துகளை மேற்கொண்டு விரிப்பின் மிகப்பெருகும் ஆதலால் இவ்வளவில் நிறுத்தி மேலே போவோம்.

ஓர் அறிவுப் புலவரின் செய்யுள், உரை என்னும் இருவகை மொழி நடையிலும் அவரின் முற்றிய புலமை தெற்றென விளங்கித் தோன்றும். புலமைத் தாய்க்குச் செய்யுளும் உரையும் இரட்டைக் குழந்தைகளாகும். இவ்விரட்டைக் குழந்தையினையும் அறிவறிந்த மக்களாகப் பெற்றெடுத்த பெருமை நம் அடிகளாருடையது. இங்கு அவர் பிறப்பித்த செய்யுளின் செழுமைத் திறன்களைப்பற்றியே பேச முற்படுவோம்.

## அடிகளாரின் செய்யுள் நூல்கள் :

மறைத்திரு. மறைமலையடிகளார் எழுதியனவாக நமக்குக் கிடைக்கும் செய்யுள் நூல்கள் இரண்டு. அவை திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை என்பதும், சோமசுந்தரக் காஞ்சி என்பதுமாம். இவற்றுள் கோவை 1899-ஆம் ஆண்டின் இடையில் தொடங்கி 1900 செப்டம்பர் மாத முடிவில் ஏறத்தாழ ஓராண்டிற்குள் முடிக்கப் பெறதாகும். காஞ்சி 1901 மார்ச்சு மாத இறுதியில் தொடங்கி மூன்று நாட்களுள் முடிக்கப் பெற்றதாகும். இவ்விரு நூல்களும் ஏழத்தாழ ஈராண்டு எல்லைக்குள் எழுதப்பெற்றன வாகும். முதல் நூலாகிய கோவை எழுதுகையில் அடிகளுக்கு அகவை இருபத்திரண்டு. காஞ்சி எழுதுகையில் அவர்களுக்கு அகவை இருபத்து நானகு. இவையிரண்டு நூல்கள் தவிர அடிகளார் எழுதியனவாக நமக்குக் கிடைப்பன இரண்டு தனிச் செய்யுள்கள். ஒன்று திருவளியல்பு கூறி நெஞ்சறிவுறுத்தல் என்னும் இருநூற்றுப் பதினுறு வரிகளைக் கொண்டு, அகவற்பாவான் இயன்ற தொடர்நிலைச் செய்யுளாகும். இரண்டு, தஞ்சை மாவட்டத்துள் சீர்காழிக்கருகிலுள்ளதும் இக்கால் வைத்தீசுவரன் கோயில் என்று வழங்கப் பெறுவதுமாகிய புள்ளிருக்கு வேளூரில் எழுந்தருளியுள்ள இறைவனைப் பாடிய "புள்ளிருக்கு வேளூர்ப் பதிகம்" என்னும் இரண்டு பத்துப் பாடல்களாகும். இப்பாக்கள் நிலைமண்டிலத்தான் இயன்ற பாக்களாகும். முற்கூறிய இரண்டு நூல்களையும் பிற்கூறிய இரண்டு தனிச் செய்யுள்களையும் இனி முறையே ஆய்வோம்.

திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை என்னும் இந் நூல், சென்னையில் உள்ள திருவொற்றியூரில் உறையும் முருகப் பெருமான் மேல், அடிகளார் தம் இருபத்தோராம் ஆண்டு இறுதியில், தாம் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது அந்நோய் நீக்கஞ் செய்யும் பொருட்டு இறைவனை வேண்டிக் கொண்டபடி; அந்நோய் நீங்கிக் குணமடைந்தபொழுது அம்முருகனைப் போற்றி இயற்றியதாகும். எனவே இஃது இறைவனைப் பற்றி எழுந்த நூலாகும். இந்நூல் காப்புச் செய்யுள் தவிர்த்த முப்பது செய்யுள்களைக் கொண்டது. இச் செய்யுள்கள் வெண்பா, கட்டளைக் கலித்துறை, அகவல் என்னும் மூவகை யாப்பான் மாறிமாறி இயன்று, அகத்துறையிலக்கணங் களுக்கு ஏற்ப எழுதப் பெற்றனவாகும். புறநிலையான் இந்நூல் அக விலக்கணத்தின்பாற் பட்டாலும் இச்செய்யுளின் பொருள்கள் யாவும்

அகநிலையான் மெய்ப் பொருள் தோன்ற விளங்கி, நூலாசிரியர் தாம் சார்ந்த சைவ சமயத்தின் அருமை பெருமைகளை விளக்கி நிற்பன வாகும். இவ்வகையில் மாணிக்கவாசகர் இயற்றிய திருக்கோவை யாருடன் இதனை ஒப்பிடலாம். ஆனால் திருக்கோவையார் ஒரே வகை யாப்பான் இயன்றது. அடிகளாரின் மும்மணிக் கோவையோ மூவகை யாப்பான் இயன்றது.

இனி, அவரின் சோமசுந்தரக்காஞ்சி என்னும் நூல் மொத்தம் பதினெட்டு ஆசிரிய நிலைமண்டிலச் செய்யுள்களையும் அறுபத்தேழடி அகவற்பாவால் இயன்ற தொடர்நிலைச் செய்யுளையும் கொண்ட மிகச் சிறிய நூலாகும். அடிகளார் இந்நூலை மூன்று நாட் களில் பாடியதாகக் குறிக்கின்றார். இந்நூல் அடிகளார்க்குச் சைவக் கொண்முடிபுகளின் நுண்பொருள்களைச் செவியறிவுறுத்திய அவர் தம் ஆசிரியர் சோமசுந்தரர் அவர்கள் பெரும் பிரிதுற்ற பொழுது அடிகளார் இயற்றிப் பாடிய இரங்கற்பாக்களைக் கொண்டது. கோவை அடிகளாரின் சமயக் கடவுளாகிய முருகன்மேல் பாடியதென்றால், இக்காஞ்சி நூல் அடிகளாரின் சமயக் குரவராகிய சோமசுந்தரர் மேல் பாடியதாகும். கோவை முருகனை எண்ணி வாழ்த்தியும் போற்றியும் பாடியது. காஞ்சி தம் குருவை எண்ணி வருந்தியும் போற்றியும் பாடியது. அடிகளார் தம் குருவின் மேலும் தாம் கொண்டாடும் இறைவன் மேலுமே இச் செய்யுள் நூல்களைச் செய்துள்ளார். அவ ரெழுதிய தனிப் பாடல்கள் இரண்டும்கூட இறைவன் மேல் பாடிய பாடல்களாகும். ஒன்று பதிகம்-போற்றிப் பாடல்; மற்றொன்று நெஞ்சறிவுறுத்தல்; இறைவன் திருவருளியல்புகளைத் தம் நெஞ் சிற்குக் கூறியது. அதன்வழி அவன் புகழ் பாடியது. ஆக அடிகளார் தம் இளமை நெஞ்சினுள் கிளர்ந்து பொங்கிய உணர்வுகளில் இறைத் தன்மையும் ஆசிரிய நன்றியுமே இருந்தனவாக அறிகின்றோம். இவ் விரு நூல்களின் வழியும் அவை நன்கு புலப்படுத்தப் பெறுகின்றன. அடிகளாரின் களங்கமற்ற தூய நெஞ்சினையும் நாம் உணர்கின்றோம். கோவை தம் பொருட்டு எழுதப்பெற்ற நூல் என்றால், காஞ்சி தம் ஆசிரியர் பொருட்டு எழுந்த நூல். இவையிரண்டுந்தாம் மறைத்திரு. அடிகளார் இயற்றிய செய்யுள் மணிகளாக நமக்குக் கிடைத்துள்ளன.

**அடிகளாரின் செய்யுளின்பம் :**

இவற்றிலுள்ள செய்யுள்கள் யாவும் சொற்சுவை பொருட்சுவை முதலியவை நிரம்பி, ஆழமான கருத்துகளும் அகன்ற சமயநூல்

உண்மைகளும் கொண்டு விளங்குவனவாகும். கோவையிலுள்ள வெண்பா ஒவ்வொன்றும் செப்பலோசை பிறழா வண்ணம் இயல்கின்ற தன்மை வியந்து பாராட்டுதற்குரியதாகும். செய்யுள்களின் ஒவ்வோரடியிலும் அடிகளாரின் பழுத்த தமிழ்ப் புலமையும், ஆழ்ந்த முதுநூற் பயிற்சியும் நன்கு விளங்குகின்றன. அவர் அவ்விளமைப் பருவத்தில் அறிந்திருந்த சைவ சமய நூலுண்மைகளை அறியுங்கால், அவர்க்கு இயற்கையிலேயே வாய்ந்த மதிநுட்பத்தையும் அறிவாற்றலையும் அறிந்து பாராட்டி வியக்காமலிருத்தல் இயலாது. பழுத்த சமயவாசிரியர்கள் சிலர் தம் மெய்யறிவு முதிர்ச்சியால் தம் முதுமைக் காலத்துச் செய்த முற்றிய சமயநூல் உண்மைகளை அடிகளாரின் இளநெஞ்சம் கதுமென வாங்கி, இலக்கிய நலம் குழைய இயற்கையின்பஞ் செறிய, செய்யுள் வடிவாக நமக்குத் தந்துளதெனும் நிலையை நினைக்கையில் நம் நெஞ்சம் பெருமிதமுறுகின்றது. அடிகள்பால் நமக்கு அளவற்ற பெருமதிப்பு ஏற்படுகின்றது.

இக்காலத்துச் செய்யுள்-அல்லது பாடல் என்று எழுதப்பெறும் சொற்கூளங்களையும் ஒலி ஓலங்களையும் படித்தும் கேட்டும் புளித்துப் போகும் நமக்கு, அடிகளாரின் இச் செய்யுள்கள் உள்ள அமைதியும், பேரின்பமும் ஏற்படுத்துவனவாகும். கழகச் செய்யுள்களின் பொருள் திண்மையும் சொற் செறிவும் கொண்டு விளங்கும் பாடல்கள் ஒவ்வொன்றும் ஓடவிழ்க்க வெளிப்படும் ஒளிமுத்தம் போல் மின்னிச் சுடர்விடுகின்றது. எளிய உணர்வும் வெளிய அறிவும் கொண்டு விளங்கும் கல்லாமாந்தர்க்கு இவரின் செய்யுள்கள் நீர்நாய் கவ்விய நெற்றுத் தேங்காய்போல் பயனற்றதேனும், ஓரளவு கற்றூர்க்கும் இந்நூற் பாடல்கள் கழிபேரின்பம் நல்க வல்லனவாகும். கழக இலக்கியங்களால் பெறுகின்ற இன்பமும் பயனும் அடிகளாரின் செய்யுள்களால் நாம் பெறமுடிகின்றதென்றால், அதற்கு அடிகளார் அவர்களின் ஆழ்ந்த கழகநூற் பயிற்சியும் மெய்யறிவுத் திறமுமே கரணியங்களாகும்.

### பாப்புலவர்க் கிருக்க வேண்டிய தனித்திறன்கள் :

பாப்புலவர் ஒருவர்க்கு யாப்பறிவும், இயற்கையை ஊடுருவிக் காண்கின்ற கூர்த்த கண்ணோட்டமும், உலகவியல்புகளை விருப்பு வெறுப்பின்றித் துய்க்கும் மனவேட்கையும், துய்த்தவற்றை அகமும் புறமும் பகுத்துணரும் மெய்ப்பொருளறிவும், அவ்வறிவு முதிர்ச்சியான் பிறர்க்கும் அவற்றை உணர விரித்துரைக்கும் தள்ளா

விருப்பமும், தகுந்த சொல்லறிவும் மிகுந்த மொழிநூற் பயிற்சியும், ஊற்றுக்கால்போல் உவமைத்திறனும், இல்லதை உள்ளதாகவும் உள்ளதை இல்லதாகவும் காணும் வற்றாத கற்பனைச் சுரப்பும், இலக்கண இலக்கிய ஊறல்களும், கண்டதைக் கண்டவாறு சொல்லும் உரைச் செழுமையும் உள்ளுணர்வழுக்கமும், மாந்த மனத்தின் மறைவான மேடுபள்ளங்களைத் தடவியறியும் காந்த மனமும், அங்காந்து அவாவித் திரிகின்ற கூர்த்த பொறிப் புலன்களும், சூழலுக்குக் கட்டுப்படாமல் எம்பித் தாண்டும் ஏற்றமும், அனைவரிடத்தும் இணைந்து இணக்கமுறும் அன்பு நீர்மையும், அஃறிணையிடத்தும் வளைந்து தழுவும் அருள் நெஞ்சமும், அல்லதை யொறுத்து நல்லதைப் போற்றும் அறவரனும் மறவெழுச்சியும் எவ்வளவுக்கெவ்வளவு மிகுந்தும் குறைந்தும் நிற்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவர் புலமையில் ஏற்றமும் இறக்கமும் நின்று நிலவும் என்க. உலகப் பெரும் பாவலருள் பெரும்பாலார் இவ்வனைத்துச் சிறப்புகளும் பொருந்தியவரே யாவர்.

### அடிகளாரின் செய்யுள் திறன் :

நம் அடிகளாரும் இத்தகைய இயற்கைச் செப்பம் மிக்கவர் என்பதை அவரின் பாடல் நூல்களே நமக்குச் சான்று பகர்கின்றன. ஓரிரண்டு எடுத்துக் காட்டுகளால் அவற்றை நிறுவியும் காட்டுவோம்.

*நேரிறை முன்கை வாரொலிக் கூந்தல்*
*அரிகடை யொழுகிய பெருமதர் மழைக்கண்*
*இலவுறழ் செவ்வாய் நிலவுறழ் திருநுதல்*
*கொடிபுரை மருங்குல் கடிதிகழ் மேனி*
*கரும்பினு மினியவென் னரும்பெறற் பாவாய்!*
..........................................................
*செயிரற வெழுதிய வுயிரோ வியமே!*
*அருமையின் மிகுந்தவெம் பெருமுதற் றந்தை*
*யாற்று விருப்பொடும் ஏற்றிப் பார்க்கும்*
*விளிவற விளங்கிய ஒளிமணி விளக்கே!*

—திருவொற்றி-கோவை. (4-1-18).

—என்று தோழி தலைவியை விளிக்கின்றாள். இப்பாடல் எத்துணை அழகியதாய் இழுமென் ஓசை தழுவி ஆற்றொழுக்காக நடையிடுகின்றது பார்மின்கள்! 'செயிரற வெழுதிய உயிரோ வியமே' —என்னும் அடியில் மனநெகிழ்ச்சியுடன் விளங்கும் அன்பு அடிகளாரின் அருள்மனத்தே எழுந்து தோன்றிய அன்பன்றோ! வரலாற்று

# நூலகங்களில் தென்மொழிக்கு இடமில்லை !

## தமிழக அமைச்சர்களின் பார்வைக்கு...!

தமிழகத்தில் உள்ள நூலகங்களில் நடக்கும் ஊழல்களுக்கு அளவேஇல்லை. மானமும் ஒழுக்கமுமற்ற துறைத் தலைமைகளால் அரசுக்குப் பெருத்த செலவும் மக்களுக்குக் குறைத்த பயனுமே —இங்குள்ள நூலகங்களால்—ஏற்படுகின்றன. நூல் வெளியீட்டுக் கொள்ளைக்காரர்கள் ஆங்காங்குள்ள தலைமைகளுக்கு வாய்க்கரிசி களைப் போட்டுவிட்டுப் பொதுமக்களின் வரிப்பணத்தை ஏராளமாகப் பங்குபோட்டுக் கொள்ளும் வேடிக்கை இங்கு மிகுதி! இவ்வூழல்களை எவராலும் சான்று காட்டி நிறுவ முடியாதபடி அவ்வளவு எச்சரிக்கை யாக நடத்துகின்றனர்! இவற்றின் கள்ளச் சந்தைத் தரகுகள் இப்படி இருக்க, உண்மையான தமிழ் வளர்ச்சிக்காகிலும் அரசால் ஆக்கம் ஏற்படுகின்றதா? இல்லவே இல்லை. இவற்றைப்பற்றி விரிவாகப் பின்னர் எடுத்துரைப்போம்.

தமிழே உயிர் மூச்சாகக் கொண்டு கடந்த பதினைந்தாண்டு களாகத் தூய தமிழ் வளர்க்கும் அரிய பணியில் தன்னை மூழ்கடித்துக் கொண்ட தென்மொழி, தமிழ்ச்சிட்டு போலும் இதழ்கள் தமிழை வளர்க்கவில்லையாம்; தமிழர்க்குத் தேவையில்லையாம்; நம் தமிழகத் தின் நூலகங்களில் போடுதற்குத் தகுதியில்லையாம்; நம் நூலக அதிகாரிகள் சொல்லுகிறார்கள்! ஆனால் கீழுள்ள இதழ்கள்தாம் தமிழ் வளர்க்கின்றனவாம்; தமிழர்களுக்குத் தேவையாம்! தகுதி வாய்ந்தன வாம்!

தினமணி, முரசொலி, இந்து, குமுதம், கல்கண்டு, காஞ்சி, தென்னரசு, கூட்டுறவு, தமிழ்முரசு, சமயசோதி, அஞ்சுகம், அம்புலிமாமா, தினமணிக்கதிர், தன்னாட்சி, கலைக்கதிர், மஞ்சரி, மறுமொழி, ரைசிங்சன்...இன்னும் பல! தமிழாய்ந்த தமிழர்கள் அரசு செய்யும் நாட்டில் தமிழ் வளர்க்கும் தென்மொழி போலும் இதழ் களுக்கு நூலகங்களில் இடமில்லை! அமைச்சர்கள் கவனிப்பார்களா?

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சிகளை அவர் புனைந்தெழுதிய அடிகளில்தாம் எத்துணை அழகு சுரந் தொழுகுகின்றது, பாருங்கள் !

நீரினும் நெருப்பினுங் காட்டினை யொருதிறம்!
பனையினும் என்பினுங் காட்டினை மறுதிறம்! இனியே,
அறிவொளி கொளீஇப் புரைநெறிப் பொய்ச்சமண்
முறிய நூறி மெய்த்திறங் கிளக்கும்
மெய்ப்பொருட் சைவம் மெய்வகை விளக்கிப்
பரங்குன் றமர்ந்தனை மாதோ!

— திருவொற்றி-கோவை. (6–71–76).

இறைவனுக்கும் தமக்கும் ஒற்றுமை பல உண்டென்று கிளக்கும் பாடலடிகளில், அடிகளார் தம்மின் அடக்கமும் அருளும் எவ்வாறு கலந்து மிளிர்கின்றன பார்மின்கள் !

(தொடரும்



# மக்களவை

## ம: 195: பள்ளிகளில் பயனற்ற விடுமுறைகள்.

பகுத்தறிவுக் கொள்கைகளை அப்படியே அடியொற்றிப் போகா விட்டாலும், ஓரளவு மூட நம்பிக்கைகளையும் பயனற்ற விழாக்களை யும் தமிழர்கள் காலத்திற்குக் காலம் ஒதுக்கியே வருகின்றனர். அப்படியிருக்க, இன்னும் கொண்டாடாத பல விழாக்களுக்குப் பள்ளி களிலும் பிற அலுவலகங்களிலும் விடுமுறைகள் விட்டு வருகின்றது தமிழ்நாடு அரசு. விடாது உழைக்க விரும்புகின்ற நெஞ்சங்களுக்கு இத்தகு செயல்கள் பெருந் தடைக்கற்களாகி நிற்கின்றன. எடுத்துக் காட்டாக மூத்த பிள்ளையார் நலமி (விநாயகர் சதுர்த்தி), முதிரைக்காருவா (மகாளய அமாவாசை), திருமாலியப் பதினொரமை (வைகுண்ட ஏகாதசி), வெற்றிப்பதமி (விஜய தசமி) போன்ற இன்னும் பலவற்றிற்கு ஏன் விடுமுறை? இந்த விடுமுறையில் யாரேனும் விழாக் கொண்டாடுகின்றனரா, வேதவழிப் பார்ப்பனரைத் தவிர? அடுத்து, காருவா நாள்களில் பள்ளி, வழக்கம் போல் காலை 10 மணிக்குத் தொடங்காது, ஒரு பிரிவேளை (Period) கழித்து 10-45-க்குத்தான் தொடங்கப்படுகின்றது. கற்றவர்களில் அல்லது கற்பவர்களில் யார் யார் இப்போது காருவா நோன்பு (அமாவாசை விரதம்) இருக்கின்றனர் என்று கணக்கிட்டுப் பார்த் தால், அக்கணக்கிலும் ஆரியனே தென்படுவான். அதுவும் மிகக் குறைவாகத்தான் இருககும். இம் மிகச்சிறு கூட்டத்திற்காக ஏன் ஒரு பிரிவேளைப் பயனை ஒழிக்க வேண்டும்? ஆகவே, ஒரு பிரிவேளை கழித்துத்தான் பள்ளிகளைத் தொடங்க வேண்டுமென்கின்ற நிலையினை, அரசினர் உடன் களைத்தெறிந்து, மாணவர்கள் உறுபயனெய்த வழி வகை செய்ய வேண்டும். —நா. எழில்மகிழ்நன், முதனை.

## ம: 196: தமிழ் மாதங்கள்.

ஐயா, “சித்திரை முதல் பங்குனி வரையுள்ள பன்னி ரண்டு மாதங்களின் பெயர்களும் தமிழ்ப் பெயர்களே யாகும். எவ்வாறெனில், மாதங்களின் பெயர்கள் அனைத் தும் ‘ஐ’ அல்லது ‘இ’ என்னும் எழுத்துகளில் முடிவுறும்

என்று தொல்காப்பிய சூத்திரம் ஒன்று சான்று பகர்கிறது. ஆகவே சித்திரை முதல் பங்குனி வரையுள்ள மாதங்கள் அனைத்தின் பெயரும் 'ஐ' அல்லது 'இ' எழுத்துகளில் முடிவுறுவதால் இவையனைத்தும் தமிழ்ப் பெயர்களே" என்று கரந்தை (தஞ்சை) தமிழ்க் கழகத்தார் நடத்திய "கலைமகள்" விழாவில் கலந்து கொண்டு பர். வ. சுப. மாணிக்கம் அவர்கள் "தொல்காப்பிய நயம்" என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவில் கூறினார். அப்படியானால், தற்போது தமிழில் நாம் வழங்கிவரும் 'சுறவம்' முதல் 'சிலை' முடியவுள்ள மாதங்களின் பெயர்கள் தொல்காப்பிய இலக்கணத்தினின்றும் வழுவுகின்றதே, ஏன்! அருள்கூர்ந்து விளக்கிட வேண்டுகிறேன். —இறைமகிழ்நன், தஞ்சாவூர்.

## ம: 197: அண்ணாவைக் கடிவதா...?

விடுதலை இயக்கச் செயற்பாட்டிற்கு நான் நம்பிக் கொண்டிருக்கும் ஐயா அவர்களே, அறிஞர் அண்ணா அவர்களை இவ்வளவு இழிவாகக் குறிப்பிட்ட மடலுக்குச் சிறப்பு மடல் என்ற தகுதி தரப்பட்டது ஏன்? மடல் விடுத்தவர் தம் பெயரைக் குறிப்பிடவில்லையே அந்தச் சிறப்புக் கருதியா? தமிழக விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவன் என்ற உரிமையோடு நான் அறைகூவல் விட்டுச் சொல்கிறேன். "அறிஞர் அண்ணா தமிழினத்தையும், நிலத்தையும் அடகு வைத்துவிட்டுப் போய் விட்டார்" என்ற கோவைக்காரரின் கணிப்பு தவறானது; கண்டனத்திற்குரியது; மிக இழிவானது; பொருளில்லாதது; அடிப்படையற்றது. தமிழகம் அடிமையாக்கப்பட்டுள்ள உண்மையைத் தமிழ்மாந்த இனத்தின் அறிவு அடகு வைக்கப்பட்டுள்ள இழிவைச் சுட்டிக்காட்டி விட்டுச் சென்றவர்களில் முகாமையானவர்கள் பெரியாரும், அண்ணாவும், பாவேந்தரும் தாம். இருப்போரில் பாவலர் ஒருவரே.

தந்தை பெரியாரிடத்திலும், அறிஞர் அண்ணாவிடத்திலும் ஆயிரக் கணக்கான குறைகளைச் சுட்டிக்காட்டத் தென்மொழிப் படைக்கு உரிமையும் உண்டு; தகுதியும் உண்டு; ஆனால் அந்தக் குறைகளுக்காக இவ்வளவு இழிவாக வசைபாடுவது தென்மொழி படித்த பின் ஏற்பட்ட பண்பாக இருக்காது என்று திண்ணமாய் நம்புகிறேன். தமிழ் மண்ணிலே பிறந்த ஒருவன் பெரியாரையும், அண்ணாவையும் இழிவாகப் பேசுகிறான், அல்லது எண்ணுகிறான்

என்றால் அவனது அறியாமையை எண்ணி இரக்கப்படுகிறேன். அறிஞர் அண்ணா முழக்கிய முழக்கத்தால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள இனவெழுச்சியையும், மொழியுணர்ச்சியையும் வரலாற்றில் மறைக்க இயலாது. காஞ்சிபுரம் வீட்டுத் திண்ணையில் படுத்துக் கொண்டேனும் விடுதலை கேட்பேன் என்று முழக்கியவர்தான், அண்ணா! மறுக்கவில்லை. பின்னர் அவரிடம் ஏற்பட்ட சருக்கலையும் நான் மறைக்க விரும்பவில்லை. இன விடுதலைத் தலைவராகத் தமிழக வரலாற்றில் இடம்பெற வேண்டியவர் அரசியல் அறிஞராக மட்டும் குறிக்கப் பெற வேண்டியவராகி விட்டார்; அவ்வளவுதான். அதற்காக அவர் முழக்கிவிட்டுப் போயிருக்கும் இனமுழக்கம் இறந்துபட்டதாகக் கருத முடியாது. விடுதலை எண்ணங்கள் மறைந்து விட்டதாகவும் கொள்ளக்கூடாது. அவரின் ஆற்றல்மிகு எழுத்தையும், அச்சில் வந்த பேச்சையும் படித்து இன விடுதலை உணர்வு பெற்றவன் நான் என்று இவ்விண்ணும், மண்ணும் அதிர முழக்க விரும்புகிறேன். தமிழ் இனமொழி விடுதலைக்காகப் பேசவேண்டியதை யெல்லாம் அறிஞர் அண்ணா பேசி விட்டுப் போய்விட்டார். பாவேந்தர் பாடிவைத்து விட்டுப் போய்விட்டார். முடிந்துபோன அந்த வரலாற்றை இனியும் புரட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை. இனி வேண்டியதெல்லாம் செயற்பாடு! செயற்பாடு! செயற்பாடு! இதில் ஏன் கோவைக்காரருக்குக் கருத்து முரண்பாடு.

பிறர் மீது அன்புகாட்ட வேண்டியதும் சிலகாற் பாராட்ட வேண்டியதும் தனிமாந்த இயல்பு. பாவலரின் கைத்தூவல் கலைஞரைப் பாராட்டி எழுதுவதும் அந்த வகையைச் சேர்ந்ததே. அதற்காகத் தென்மொழி தடம்மாறிப் போய்விட்டதென்று படம் போட்டுக் காட்டத் தேவையில்லை. அது வெறும் புகைப் படத் தோற்றந்தான். புகைப்படம் எடுக்கப் பெற்ற போழ்து விழி மூடியவனெல்லாம் இறந்து பட்டவன் என்று பொருளில்லை. இன்னும் சொல்வதானால் பாவலரின் எதிர்ப்பும், பாராட்டும் ஒரே தன்மையுடையனதாம். பகை மீது பாயும் எதிர்ப்பு அடியோடு பகையை அழிக்கும். தக்கார் மீது வீசப்பெறும் பாராட்டு அங்கே இண்டு இடுக்கில் இருக்கும் நச்சு உயிரிகளை அழிக்கும். ஒரு சில பாராட்டுச் சொற்களை மட்டும் கருத்திற் கொண்டு தென்மொழியாரை எடை போட்டு விட வேண்டாம். அவரின் ஆழ்நெஞ்சமும், எண்ணமும் ஊழ்போல்-பிறரால் உணர இயலாமற் செயற்படக் கூடியன. தென்

மொழியின் விடுதலை இயக்கம்பற்றிய கோவைக்காரரின் கணிப்பும் மிகத் தவறானது.

பாவலரின் அறிவுக் கூர்மையின் நுனி இதுதான் என்று யாரேனும் கூறுவார்களேயானால் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது இதுதான். அஃது அவரின் அறிவுக் கூர்மையின் முனை அன்று. அவருடைய அறிவுக் கூர்மையின் முனை இருக்குமிடம் அவருடைய ஆற்றலுக்கும் எட்டாதது. ஆனால் கோவைக்காரர் தொட்டுக்காட்டியது அவருடைய வழித்தடத்தில் ஒட்டிக் காற்றில் இடம் மாறிப்போன தூசி ஏற்படுத்திய தடம். மிகைப்படுத்திக் கூறப்பட்டக் கூற்று அன்று இது. தமிழ் மாந்த இனம் அவரை எந்த அளவு பயன்படுத்திக் கொள்ளப்போகிறதோ அந்த அளவுதான் இதை என்றால் மெய்ப்பிக்க இயலும். நிற்க.

அறிஞர் அண்ணாவால் விடுதலை உணர்வு பெற்ற நான், இப்போது தென்மொழியெனும் விடுதலைக் கருவி உருவாக்கக் கூடத்தில் என்னை ஒப்படைத்துள்ளேன். அந்த உரிமையில் தடம் மாறிப்போன ஓர் அன்பருக்குப் பாவலர் சொன்ன சொற்களை விடை யாக அளிக்க விரும்புகிறேன். "தமிழக விடுதலை இயக்கத்தை இன்னும் செம்மையாக முன்னின்று நடத்த (செயல்வழியாக) யாரே னும் முன் வந்தால் (கோவைக்காரரும் முன் வரலாம்) அவர் தலைமையை ஏற்றுச் செயல்படத் தமிழக விடுதலை இயக்கம் என்றும் அணியமாயுள்ளது".

குறை கூறுவதை நிறுத்தித் தக்க செயற்பாட்டுடன் முன் வருக. இம்மடலில் என் பெயரைத் துணிவோடு வெளியிட்டுள்ள தற்குக் காரணியம் என்னை நிகர்த்தவர்கள் என்னை அடையாளம் கண்டு கொள்ளும் பொருட்டே.

—வை. தமிழ்க்குமரன், திருவாரூர்.

## ம: 193. கொள்கையாம்... கொள்கை!

பேரன்புசால் ஐயா! வணக்கம்! இக்கால் நந்தமிழகத்தில் இயங்கி வரும் இயக்கங்களின் நிலையை நினைத்தால் நம்மை நாமே நொந்து கொள்வதைத்தவிர வேறு வழியில்லை. அவற்றிலும் தங்களை முழுக்க முழுக்க இறைமறுப்பாளர்கள், சீர்திருத்தவாதிகள் என்று தருக்கிக் கொள்ளும் பொதுவுடைமையாளர்கள், தி.மு.கழகத்தவர்கள் போன்ற

வர்களின் செய்கைகளைப் பார்த்தால்...தூ......இவர்கள் நடத்துவதும் இயக்கங்கள் தாமா என்று எண்ண வேண்டியுள்ளது.

சோவியத்து நாட்டைப் பாருங்கள்; அங்கே நிலா மண்டிலத்திற்குப் போய்வருகிறார்கள். நாம் அரசமரத்தைச் சுற்றுவதை இன்னும் விட்டோமில்லை' என்று ஒரு நாளைக்கு ஒவ்வொரு நாளும் மேடைதோறும் கூறிவரும் இக்கால் மார்க்சீயப் பொதுவுடைமைக் கட்சியின் தமிழ்நாட்டுச் செயலாளரான "பிராமணனுக்கு நல்லவர்" இன்று வரை (26-10-74) தம் உடம்பிலணிந்துள்ள பூணூலை ஏன் கழற்றவில்லை என்று அந்தப் பொதுவுடைமைக்காரனும் கேட்க முடியுமா? இவர்களின் இயக்கத்தவர்கள் பல தொழிலகங்களிலும் அண்மையில் கருவிப்(ஆயுத)பூசனைக்கென ஒவ்வொரு தொழிலாளியிடமும் பணம் தண்டி, தேங்காய், உடைத்ததும், வத்தி கொளுத்தியதும் எந்தக் கொள்கையின் வழியிலோ? இன்னும் இவர்களின் சீடக்குஞ்சுகள் சிற்றூர்ப்புறத்தில் கொண்டாடும் காளி,மாரி, முனி, அய்யனார் போன்றவற்றைக் கொண்டாடுவதைக் கணக்கிட முடியாது. நிற்க.

தாங்கள்தாம் இந்த நாட்டிலே பகுத்தறிவைப் பரப்பினோம் என்று பீற்றிக்கொள்ளும் தி.மு.கழகத்தவர்கள், முன்னாள் "சீரங்கநாதனையும் தில்லை நடராசனையும் பீரங்கி வைத்துப் பிளப்பதுவும் எந்நாளோ?" என்று பேசியதையும் எழுதியதையும் காற்றிலே விட்டுவிட்டு, அடைந்தால் திராவிடநாடு இல்லையேல் சுடுகாடு என்பதையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டு,இன்று கோயிலுக்குச்சென்று 'பூரண கும்ப மரியாதை' பெற்றுக் கொள்வதையும், பரிவட்டம் கட்டிக் கொள்வதையும் மக்களின் மன நிறைவுக்காகச் செய்கிறோம் என்று சொல்வதும், "தாய்க்குச் சோறில்லை பிள்ளைக்குப் பாலில்லை திருவாரூர்த் தியாகராசா, உனக்குத் தேரோட்டமும், பால் முழுக்காட்டும் ஒரு கேடா?" என்று கேட்டதையும் மறந்து தலைவனுக்கும், கட்சிக்கும் விழா என்ற பெயரில் மின்னாற்றலை வீணாக்குவதும், தமிழ், தமிழன் என்றுதான் மூச்சுக்கூட விடுகிறோம் என்று பேசும் இவர்கள் பெயரைத் தமிழில் மாற்றிக் கொண்டால் என்ன என்று கேட்டால் 'அது "பாப்புலாரிட்டி" ஆகிவிட்டது என்பதும், திருவாரூர்த் தேருக்கு அச்சாணி செய்து கொடுத்ததும், 'திருவல்லிப்புத்தூர் தேரை ஓட்டியது தி.மு.க.' என்று 'சாதனை'ப் பட்டியல் போடுவதும்

என்ன கொள்கையோ? கருணாநிதி, சி பி.சி., என்.வி.என். என்பதை மாற்றிச் சுவரொட்டிகளில் போடுவதற்குக் கூடவா மாநிலத் தன்னாட்சி வேண்டும்? ப. முருகவேள், சென்னை-78.

## மா ! 99 வானொலித் தமிழர்கள்......!

அன்புள்ள ஆசிரியருக்கு வணக்கம். தமிழ் நாட்டில் உள்ள வானொலி நிலையங்கள், துதிப்பாடல், தோத்திரப் பாடல்கள், அறவுரை, துக்கடா, கதம்பம், மஞ்சரி, தேசிய ஒருமைப்பாட்டுப் பாடல்கள் என்றெல்லாம் கண்ட நிகழ்ச்சிகளைக் கண்ட பொழுதில் நிகழ்த்தி வருகிறது. கழுகுகளுக்கு மூக்கு வெயர்க்கும் என்று சொல்கிறார்கள் மெய்யோ பொய்யோ! எங்காவது, பாகவத, பாரத இராமாயணப்பட்டி மன்றங்களோ, ஆரியப் பார்ப்பனன் நீறூற்றிச் செய்யும் குடமுழுக்கோ இவற்றில் எது நடந்தாலும் வானொலி நிலையத்தினர் அங்குத்தான் இருப்பர். ஏனெனின், வானொலி முழுக்க முழுக்க அவாளின் சொத்து! தப்பித்தவறி பாவேந்தர் போன்ற தமிழரிமாக்களின் விழா நடந்தால் அஃதை ஒலி பரப்பும் முறையே தனி! வானொலிக்கு முன் அப்போது வானவூர்தி பறக்கும்; புயல்வீசும்; தொடர்வண்டி ஓடும்.

ஒருமுறை, பகுத்தறிவாளர்கள் தங்கள் சொற்பொழிவாளர் ஒருவருக்குப் 'பெண்சிங்கம்' என்று 'அடைவு' கொடுத்து விளம்பரப் படுத்தினர். 'வானொலி' பெண் சிங்கங்கள் மேடையிலே இன்று சீறுகின்றன; அவை சிங்கங்களா? அசிங்கங்களா' என்றெல்லாம் ஒரு நாடகத்தில் அதைக் குறித்து விளாசியது. சென்ற ஆண்டு தமிழக அரசு 'இந்திர விழாவை' நடத்தியதை மறைமுகமாகப் பகடி செய்து ஒரு நாடகம்! அதில் 'தாத்தாவுக்குப் பல்பிடுங்கும் விழா தாத்தாவுக்குப் பல் வைக்கும் விழா' என்றெல்லாம் ஒரே கிண்டல், எல்லாருக்கும் பொதுவாக இயங்கவேண்டிய வானொலி, தி.மு.க வில் இருந்து சிலர் விலகியதை வைத்து, அ.நா.மு.நா, கா நா தி.நா.வா. என்று பலவாறு 'உரைவீச்சுகளைப்' பயன்படுத்தி அக்கட்சியைச் சாடியது. ஒருநாள் வானொலி கேட்கும் என் போன்றவனுக்கே பொறுக்க முடியவில்லை. 'வானொலித் தமிழர்' என்ன செய்கின்றனரோ? அவர்கள் 'அட இராமா, அட கிருட்ணா'வோ, தம்மரோ தம்'மோ 'இந்தாபாத்தோ' போட்டுக் கொண்டு கொண்டு வயிற்றை நிரப்புவதே நன்று. அதுவே தமிழ்த் தொண்டு!

—பூளைமேட்டார், கோவை




**முன்னுரைக்கு முன் உரை:** தொடர்: 3

திரு. முல்லைவாணன் பிப்ரவரி 14-இல் நாகையிலிருந்து கப்பல் ஏறுவதற்கு முன், இன்னொரு வேலையையும் எனக்காகச் செய்ய வேண்டியிருந்தது. நான் விற்பனைக்காக மலையகம் கொண்டு செல்ல விருந்த தென்மொழி வெளியீடுகள் அனைத்தையும் இரண்டு பெரிய சிப்பங்களாகக்கட்டி அவர் போகின்ற அதே கப்பலில் பதிவு செய்ய வேண்டியிருந்தது. அதன் பொருட்டு கப்பல் ஏறுகின்ற நாளைக்கு முன்னையநாள் அவர் நாகைப்பட்டினத்திற்கு வர வேண்டியிருந்தது. அவர் அங்குப் போய்ச் சேருமுன் என் மகன். பூங்குன்றனும் தென்மொழி அமைச்சர் திரு. அரணமுறுவலும் நூல்களை இரண்டு சிப்பங்களாகக் கட்டிப் பேருந்து வண்டியில் போட்டுக்கொண்டு நாகை சென்றனர். அங்கு முல்லைவாணனைக் கண்டு சிப்பங்களை அதே கப்பலில் ஏற்றியனுப்பப் பெரிதும் முயன்றனர். அத்துடன், சிப்பங்கள் சரிவரப் பொதியப் பெறுதிருந்ததாகக் கப்பல் குழும முகவர் சொல்ல, மீண்டும் சிப்பங்கள் சரிவரப் பிரித்துக் கட்டப் பெற்றன. ஆனாலும் அவர்கள் அனைவரும் முயன்றபடி அதே கப்பலில் சிப்பங்கள் அனுப்பப் பெறவில்லை. முல்லைவாணன் சென்ற கப்பலுக்கு அடுத்த கப்பலிலேயே அவை அனுப்பப் பட்டன.

எப்படி முயன்றும் என் புறப்பாடு நாளுக்கு நாள் தள்ளிப் போய்க் கொண்டே யிருந்தது. என் எல்லைக்கடவு இறுதி முயற்சிக் காக நான் மீண்டும் ஒரு முறை சென்னை போனேன். இறுதியாக அது பிப்ரவரி. 23-இல்தான் என் கைக்குக் கிடைத்தது. இந்த வகையில் பெரிதும் உதவிய தமிழம் ஆசிரியர் திரு. செம்பியனை யும் அவர் தம்பி திரு. சித்தார்த்தனையும் நான் மறக்க முடியாது. அதன்பின் திரு. முல்லைவாணன் தாம் சொல்லிச் சென்றபடி, அவரிட மிருந்து வானூர்திச் சீட்டு வரும் வரும் என்று சில நாட்கள் காத்திருந்தேன். அதற்குள் தென்மொழி அலுவலகத்தில் நான் இல்லாத பொழுது நிகழ வேண்டிய செயல் அமைப்பு களைப் பற்றியும், இதழ்கள் தொடர்ந்து வெளி வருவது பற்றியும் அமைச்சரிடம் பல ஏற் பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. தென் மொழி அமைச்சர் திரு. அரணமுறுவல் மிக்க தமிழார்வமும், நல்ல தொண்டுணர்வும், என்பால் மிகப்பற்றும் கொண்ட இளைஞர். ஆனலும் அவர் வந்திருந்து ஓராண்டுதான் ஆகியிருந்தது. இருந்தாலும் நான் வெளிநாடு சென்று திரும்பும் வரை, தென்மொழி, தமிழ்ச்சிட்டு வெளியீடுகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்வதாக எனக்கு உறுதி கொடுத்தார். அப்படியே நான் வரும்வரை, தென்மொழிக்கும் குடும்பத்திற்கும் பெரிதும் துணையாக இருந்தார்.



திரு. முல்லைவாணன்.

எல்லா வகை முயற்சிகளும் முடிந்து, புறப்பாட்டுடன் நான் மார்ச்சு மாதம் 8-ஆம் பக்கல், சென்னை சென்றேன். முல்லைவாணன் விடுத்த தொலைவரியும் அன்றுதான் கிடைத்தது. இறுதியில் மார்ச்சு 10-ஆம் பக்கல் பகல் 12-45க்குச் சென்னையிலிருந்து புறப்படும் சிங்கப்பூர் வான ஊர்தி, எண்: 707-இல் நான் புறப்படவிருந்தேன். என்னை வழியனுப்புவதற்காக என்னுடன் என் பெற்றோரும் என் தம்பியும் என் துணைவியும் சென்னைக்கு வந்திருந்தனர். நான் வானூர்தியில் போகவேண்டும் என்று சொன்ன பொழுதிலிருந்தே என் அன்னைக்கும் என் துணைவிக்கும் முகங்களில் ஒருவகைக் கலக்கம் இருந்து கொண்டே யிருந்தது. இருவரும் வருவோர் போவோரிட மெல்லாம் என் செலவைப்பற்றிச் சொல்வதும், பிரிவினல் கண் கலங்குவதுமாகவே இருந்தனர். பெரும்பாலும் என் துணைவி தாமரை என்னைவிட்டு நெடுநாட்கள் பிரிந்திருந்ததில்லை. நான் 1965-இல் இந்தியெதிர்ப்புக்காகச் சிறை சென்றபொழுது பிரிந்

திருந்த இரண்டு மாதமே அவள் அதுவரை பிரிந்த நெடிய நாட்கள். இக்கால் நான் சிங்கை சென்று திரும்ப மூன்று மாதமாகலாம் என்று தெரிந்ததும் அவள் மிகுவாகக் கவனமுற்றாள். இருப்பினும் அவள் பொதுவுணர்வில் பழக்கப் பட்டவள் ஆனதால் தன்னைத் தானே சரிப்படுத்திக் கொண்டாள். ஆனால் என் அன்னையார் எப்பொழுதும் கண் கலங்கிய வண்ணமே என்னைப் பார்ப்பதும், என்பால் பேசுவதும், வருவோர் போவோரிடம் என்னைப்பற்றிக் கூறுவதுமாகவே இருந்தார். பலவகையான எண்ணங்கள் அவரை அரித்தெடுத்தன. எனவே என்னைப் பிரிவதை அவர் ஒரு பெருந் துயர நிகழ்ச்சியாகவே எண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் இடையிடையே பலரும் என்னைப்பற்றிப் பெருமையாகக் கூறுவதைக் கேட்டு மனத்தைத் தேற்றிக் கொண்டு பெருமிதப் பட்டுக் கொள்வார். என் தந்தையார் இடையிடையே எல்லார்க்கும் ஆறுதல் சொல்வார். தாமறிந்த வகையில் வெளிநாடுகளைப் பற்றியும் வானூர்தி அமைப்புகளைப் பற்றியும் வெதவாகப் பேசிக் கொண்டிருப்பார். இவ்வாறு என் புறப்பாட்டு ஆரவாரங்கள் கடலூரிலும் சென்னையில் தமிழம் ஆசிரியர் திரு. செம்பியன் வீட்டிலும் நடந்தன.

செம்பியனின் துணைவி திருவாட்டி உலகமுதல்வி என்னைத் தன் உடன்பிறந்த அண்ணனாகவே எண்ணி வாழ்பவர். திரு. செம்பியனின் குடும்பத்தை ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக எனக்குத் தெரியும். அப்பொழுதிலிருந்தே அவரும் அவர் துணைவியும் என்பால் அக்கறையும் அன்பும் கொண்டு பலவகையிலும் என் பொதுத்தொண்டிற்கும், வினைப்பாடுகளுக்கும் துணையாக நின்றிருக்கின்றனர். திரு. செம்பியன் இல்லத்தில் எப்பொழுதும் எனக்குத் தனியான வரவேற்பு உண்டு. நான் அவர்களுள் ஒருவனாகவே என்றும் கலந்திருப்பேன். நான் சென்னை வரும் பொழுதெல்லாம் திருவாட்டி. உலகமுதல்வி என் பொருட்டுச் செய்யும் உணவுப் பண்டங்களும், சிறப்பு உணவுகளும் ஏராளம். அவற்றில் தனிச் சுவையும் மிகுந்த அன்பும் கலந்து இருக்கும். இவ்வாறு தனித்த ஒருவகைக் குடும்பப் பற்றால் இணைந்திருந்ததால், நான் எப்பொழுதும் சென்னை வந்தால் தமிழத்தில்தான் தங்குவது வழக்கம். எனவே இப்பொழுதும் நாங்கள் அனைவரும் அங்கேயே தங்கினோம்.

என் வெளிநாட்டுச் செலவின் பொருட்டுத் தங்கை உலக முதல்வி சிறப்பு விருந்து செய்திருந்தார். அன்று அவர் விழிகளிலும் பிரிவின் ஈரக்கசிவு படர்ந்திருந்தது. என் துணைவி தாமரையும், உலகமுதல்வியும் ஒருவர்க்கொருவர் மிகவும் நெருக்கமானவர்கள். இருவருக்கும் எப்பொழுதும் தனி ஈடுபாடு இருக்கும். இக்கால் என் பிரிவால் ஏற்பட்ட ஒருவகையான இன்பங் கலந்த துன்பத்தை அவர்கள் இருவரும் ஒருவர்க்கொருவர் பரிமாறிக் கொண்டனர். இவ்வாறுக இவர்களின் ஈடுபாடுகளுக்கிடையில்,

அன்பர்கள் பலரும் என்னை வழியனுப்ப வந்திருந்து செம்பியன் இல்லத்தையே மிகவும் நெருக்கமானதாக்கிக் கொண்டிருந்தனர். அவர்களிடமெல்லாம் இணைந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு மறு நாள் புறப்பட நான் அணியமாக விருந்தேன்.

## முன்னுரை :

1974 மார்ச்சு மாதம் 10-ஆம் பக்கல் என் சிங்கை புறப்பாட்டு நாள். என் சிங்கை மலையகச் செந்தமிழ்ச் செலவு அன்று 12-45 மணிக்குத் தொடங்கியது. வானூர்தி நிலையத்திற்கு அன்று காலையிலேயே அனைவரும் புறப்பட்டு விட்டோம். முந்தின நாள் மாலையே வானூர்திச் சீட்டு என் கைக்கு வந்து விட்டது. நான்



*வானூர்தி நிலையத்திற்கு வந்திருந்து வழியனுப்பிய அன்பும் உறவும்!*

போய்த் திருப்புவதற்கான வானூர்திக் கட்டணம் 1022 சிங்கைத் தாலர்கள். அஃதாவது நம் பணத்திற்குச் சரியாக 3801–84 உருபா. இந்தப் பணத்தைத் திரு. முல்லைவாணன் அங்கிருந்து புரட்டி ஈடு கட்டியிருந்தார்.

வானூர்தி நிலையத்திற்கு என் குடும்பத்துடன் திரு. செம்பியன் குடும்பம், பேரா. திரு. அறவாணன், பேரா. திருவாட்டி. தாயம்மாள் அறவாணன், புலவர். இறைக்குருவனார், புலவர். தி.நா. அறிவொளி. திரு. வலவன் ஆகியோரும் அன்பர்கள் பலரும் வந்திருந்தனர். பாவாணர் அவர்களின் கடைசி மகன் திரு. மணிமன்றவாணன் தம் புகைப்படக் கருவியால் வானூர்தி நிலையத்திற்கு வந்திருந்தவர்களைப் படம் பிடித்துக் கொண்டிருந்தார். புதுவையிலிருந்து தென்மொழி யன்பர்கள் திரு. அடியார்க்கருளி, திரு. மகிழ்கோ, திரு. தமிழ்ச்சிவம்

ஆகியோர், தம் மிதிவண்டிகளிலேயே வானூர்தி நிலையத்திற்கு வந்திருந்தனர். முனபே என் புறப்பாட்டை ஒரு வழியனுப்பு விருந்துடன் ஏற்பாடு செய்ய அன்பர்கள் சிலர் முயன்றனர். அவ் வகையான ஆர்ப்பாட்டம் எதுவும் இருக்கக் கூடாதென முன்பே அதைத் தடுத்து நிறுத்தியிருந்தேன். வானூர்தி நிலையத்திற்கு வந்திருந்தவர்களுடன் சிறிது நேரம் கலகலப்பாக நான் பேசிக் கொண்டிருந்தேன். இறுதியில் எல்லாருடனும் விடை பெற்றுக் கொண்டு ஆயத்துறை ஆய்வுக்குச் செல்ல வேண்டி வந்தது. என் அன்னையும், துணைவியும் பிற பெண்டிரும் நான் வானூர்தி நிலையத் திற்குள் புகும்பொழுது அழுது கொண்டே விடை கொடுத்தனர். இறுதி நேரத்தில் மதுரையிலிருந்து வந்த என் மருமகனார் புலவர். திரு. இறைக்குருவனாரிடம் தென்மொழியகத்தில் தங்கியிருந்து, வினைப்பாடுகளுக்குத் துணையாக இருக்கக் கூறியிருந்தேன். ஒருவாறு எல்லாரையும் விலக்கிக் கொண்டு ஆயத் துறைக்குள் நுழைந்தேன். அங்கு ஆய்வு செய்ய ஆயத்துறை நோட்டகர் ஒருவர் “ஐயா, தாங்கள் தாமே தென்மொழி ஆசிரியர் பெருஞ்சித்திரனார்?” என்று கேட்டது எனக்குப் பெருத்த வியப்பை அளித்தது. அவருக்கு ‘ஆம்’ என்று விடையளித்து அவரிடம் நான் கொண்டு சென்ற பெட்டி பைகளைத் திறந்து காட்டி ஆய்வை முடித்துக் கொண்டேன். அதன்பின் இந்தியன் வைப்பகம் நான் எடுத்துச் சென்ற இந்திய உருபாக்களை வாங்கிக் கொண்டு 18 சிங்கைத் தாலர்களை எனக்குக் கொடுத்தது. சிங்கைக்குச் செல்லும் பார்வையாளர் (Visitor) கொண்டு செல்லப் பொதுவாக இசைவளிக்கப் பெறும் தொகை அதுவே. அத் தொகை 67 உருபாவுக்குச் சமம்.

இறுதியில் சரியாக 12-30 மணியளவில் வானூர்திக்குச் சென்றேன். வானூர்தி நிலையக் கட்டிடத்தினின்று வானூர்தி நிற்கு மிடத்திற்குச் செல்லும் இடைவெளியில், வானூர்தி நிலைய எல்லைக்கு வெளியே நின்று கொண்டிருக்கும் நம் அன்பர்களையும் உறவினர் களையும் பார்த்துக் கையாட்டிக் கொண்டே சென்றேன். எல்லாரும் மகிழ்ச்சியாக எனக்கு விடை கொடுத்தனர். புதிய ஓர் உலகத்திற்குப் புறப்படுகின்ற ஒருணர்வு என் நெஞ்சில் நிறைந்திருந்தது.

என் முன் மிகப் பெரிய அளவில் நின்று கொண்டிருந்த போயிங் 707 எனக்குப் புதிய உறவை ஏற்படுத்தவிருக்கும் வானப் பல்லக்காக எனக்குப் பட்டது. மிக அமைதியான உள்ளத்துடன் அதன் படிக் கட்டுகளில் கால் வைத்து ஏறி உள்ளே சென்றேன். இனிய நறு மணம் கலந்த குளிர்ச்சியான கட்டுப்படுத்தப்பட்ட வெப்ப நிலையில், மெல்லிய மேனுட்டிசை என் காதுகளை அணைத்தது. உட்கூட்டின் நுழை வாயிலில் அழகிய வானூர்திப் பணிப்பெண் ஒருத்தி நின்று அனைவரையும் முக மலர்ச்சியுடன் வரவேற்றுக் கொண்டிருந்தாள். அவள் நான் அமர வேண்டிய இருக்கையினை எனக்குக் காட்டி அமரச் செய்தாள். மெத்து மெத்தென்றிருக்கும் அம் மஞ்சள்நிற இருக்கை

யில் நான்போய் அமர்ந்தவுடன் என் உள்ளம் என்றுமில்லா உவகையால் பூரித்து விம்மியது. அறிவு விளர்ந்து விண்வெளியுடன் தொடர்பு கொண்டது போலிருந்தது. வானூர்தியின் உட்கூடம் அழகிய ஒரு பளிங்கு மாளிகையின் பெரிய அறைபோல் இருந்தது. எங்கும் தூய்மை! எங்கும் நறுமணம்! எங்கும் இனிய மெல்லிய கருவியிசை! வானூர்திப் பணிப் பெண்களும் இளைஞர்களும் வருகின்ற வழிப்போக்கர்களை இனிய முகத்துடன் வரவேற்றுக் கொண்டிருந்தனர். மூவர் கொண்ட இருக்கை வரிசையில் நான் பலகணியோரத்தில் அமர்த்தப் பெற்றேன். பலகணியின் தடித்த கண்ணாடி வழியாக, வானூர்தி நிலையத்திற்கு எல்லாரையும் வழியனுப்ப வந்திருந்த கூட்டத்தைப் பார்த்து, அதில் என்னுடன் உறவாடிய 'என்' கூட்டத்தினரைக் கண்டு பிடித்தேன். மிகவும் சிறிய உருவங்களாக அவர்கள் என் கண்களுக்குத் தெரிந்தனர்.

சரியாக 12-45க்கு வானூர்திக் கதவு அடைக்கப் பெற்றது. வானூர்திக் கூடத்தின் ஒலிபெருக்கியில் வானூர்தி புறப்படப் போகின்றது என்று அறிவிக்கப் பெற்றது. ஓரிரு நொடிகளுக்குள் வானூர்தியில் ஓர் அசைவு தோன்றியது. பலகணிக் கண்ணாடி வழியாக வெளியே பார்த்தேன். வெளியே தெரிந்த உருவங்கள் என் எதிர்ப்புறத்திலிருந்து திடுமென நகரத் தொடங்கி விரைந்து ஓடிவருவன போல் தெரிந்தன. அவ்வளவுதான்! வயிற்றில் ஒரு சிலிர்சிலிர்ப்பு! நெஞ்சில் ஒரு படபடப்பு! 'விசுக்'கென்ற ஓர் எழுச்சி உணர்வு! ஊர்திக்கும் தரைக்கும் உள்ள தொடர்பு 'சடக்'கென விடுபட்டது போல் ஓர் உந்துணர்வு! வானூர்திப் பலகணிக் கண்ணாடிக்குக் கீழே வானூர்தி நிலையக்கட்டிடங்கள் கீழ்நோக்கிப் போவதுபோல் தென்பட்டன. விரைவில் சென்னை நகரம் கீழே மிதந்தது. எல்லாம் சில நொடிப் பொழுதுதாம்! பலகணி ஓரத்தை வெள்ளிய முகில்கள் முத்தமிடத் தொடங்கின. பருத்த, மலைபோன்ற பஞ்சுக் குவியல்களில், வானூர்தி உறவாடிச் செல்வதுபோல் ஒரு காட்சி! ஆஃகா! எவ்வளவு புதிய காட்சி! உயிரோவியம்! இதுவரை நான் புலனுணர்வுகளால் தொட்டறியாத, கிளுகிளுப்பு உடைய இன்பத் தோற்றம் என் கண்களின் முன் உறவாடியது! என் இளமைப் போதில் இருபது இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னர் நான் பாடிய ஒரு பாடல் வரி என் உள்ளத்தில் உயிர் பெற்றெழுந்து என் நாடி நரம்புகளில் ஓர் உள்ளுயிர்ப்பைத் தோற்றுவித்தது!

*" மெல்லியந் தென்றல்வந் தோட்டுகின்ற மென்முகிலின்*
*மேலேறிக் குந்தி, நீலம்*
*மேவுகிற வானத்தின் வெளியெல்லாம்*
*சுற்றியும், மேலைக் கடல் குளித்தும்..."*

—இந்தப் பாடல் வரிக்குத்தான் எத்துணை ஆற்றல்! எத்துணை வலிமை! என்னைத் தூக்கி வானத்தில் உலாவவிட்ட அப்பாட்டை மெதுவாகப் பாடிக் கொண்டிருந்தது என் உள்ளம்! (—தொடரும்

செய்தது. நீங்கள் தந்தை பெரியார்போல் தமிழ்நாட்டின் பட்டி தொட்டிகளில் எல்லாம் சுற்றுச்செலவு செய்ய வேண்டும். இப்படிச் செய்ததால்தான் நம் எண்ணம் விரைவில் ஈடேறும். நம் தென்மொழி இதழை இன்னும் விரிவாக்க வேண்டும். இதழைக் கிழமை இதழாக்கி ஒரு நாளிதழ் துவக்க வேண்டும். தென்மொழியைப்பற்றி மற்ற தாளிகைகளில் விளம்பரம் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் நம்மிதழின் விற்பனை அதிகரிக்கும். சென்னையில் விரைவில் ஒரு மாநாடு கூட்ட வேண்டும். அப்படிக் கூட்டினால் எம் ஊரிலிருந்து நூறு பேர்களுக்கு மேல் வர அணியமாய் இருக்கிறோம். இப்படியாக நம் இயக்கத்துக்கு ஆதரவினைத் திரட்டிக் கொண்டு இன்னும் ஈராண்டுக்குள் தனிநாடு போராட்டத்தைத் துவக்க வேண்டும். அதற்காக நாங்கள் எம் உயிரையும் ஈய அணியமாய் உள்ளோம்.

தென்மொழி வாழ்க! தேசு. வீ. தெய்வமணி,
தேசுமுகிப் பேட்டை, (செங்கை மா. வ.)

**0: 416**: பேரன்புநிறை தமிழ் ஐயா, என்றன் புல்லிய வணக்கங்கள்! அமிழ்தினுமினிய தமிழ்மொழி வழங்கும், இமிழ்திரைக்கடல் சூழ் தமிழகத்தின் தலைநகரினின்றும், உயரிய தமிழ்த்திங்களிதழாகிய "தென்மொழி" வெளியாதல் சாலவும் பெருமைக்குரியதாகும்; பொருத்தமுடையதுமாம். என்றாலும் கடந்த பன்னீராண்டுகளாகப் பன்னருந்துயர்கட்கிடையிலும், தனித்தமிழ்த் தொண்டே தலையாய தொண்டெனக் கொண்டு, நாளிதுவரை இடையீடின்றி நடையிட்டுவரும் "தென்மொழி" இதழ், எத்துணையளவு மெத்தவுங் கற்றறி மாந்தருளத்தில் தனித்தமிழுணர்வினைத் தோற்றுவித்துள்ளது? மில்டனையும், பேகனையும், கீட்சையுமே நாளும் நாளும் நாத்தழும்பேறப் பேசித்திரியும் நல்லறிஞர்(!) பெருமக்கள், எந்த அளவு, தூயதமிழுணர்வுக்கும், எழுச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமுமளித்துள்ளனர்? தொடக்கப்பள்ளி ஆசிரிய நன்மக்களிடத்தாயினும், தமிழுணர்ச்சி தலையெடுத்துள்ளதா எனில், இம்மியளவுமில்லையென்றே கூறவேண்டியுள்ளதே.

இற்றைஞான்று, கல்லாத மாந்தரைக் காட்டிலும், கற்றறி மாந்தரே பொருட்பற்றும், ஈட்டும் பேராவலும் மிகக் கொண்டு அலைதல் கண்கூடு. அவர்கள், மொழித்தூய்மை, நாடு, இனம் ஆகியன குறித்துச் சற்றுங் கவலுறவில்லை. அவர்தம் எதிர் வருங் கால வாழ்க்கை, எழில் நிறைந்த வாழ்க்கையாய் இருத்தல் வேண்டுமென்பதே–அவர்தம் கவலை. இவர்களுந் தமிழ்மண்ணில், தமிழர்கட்குப் பிறந்த தமிழர்களே(!) என்பதை யெண்ணுங்காலை, என் சிறு நெஞ்சு பெரிதும் நோகின்றது. ஆனால் பொருளறியா அப் புல்லறிவாளர்தம், போக்குப்பற்றித் தாங்கள் சிறிதுங் கவலுறல் வேண்டா. இன்று நஞ் செந்தமிழ் மொழிக்கு ஆக்கமும், ஊக்கமும் ஆட்பெருக்கமும் இல்லாது போகலாம். பன்னீராண்டுகளாக நடந்துவந்த, தனித்தமிழ் நெடுஞ்சாலையின் நீண்ட நெடுஞ் செலவில், இன்னுங் கடந்திட வேண்டிய தடைக்கற்கள் பலவாகலாம். எனினும், "தென்மொழி" தொடங்கிய தூய தமிழ்த்திருப்பணியில் உண்மையும், திண்மையும், உரனும், தமிழுக்கு அளவிறந்த நன்மையுமுண்டென்பதைக் காலம் நிலைநிறுத்தல் மலையிலக்கே. தங்களது நீண்ட நெடுஞ் செலவில் என்னையொத்த இளைஞர் சிலர், வழித்துணையாய்

(அடுத்த பக்கம் பார்க்க)

வர, என்றும் அணியமாயுள்ளனர். அத்தகைய உண்மைத் தமிழ்த் தம்பிகளைத் துணையாகக் கொண்டு, துணிந்து செல்க. ஆட்டு மந்தைகள் ஆயிரமிருந்தாலென்ன? அரிமாக்குருளைகள் இரண்டு சாலுமே.

—தென்மொழித்தப்பி, பெரு. தமிழ்வேந்தன், உத்தண்டியூர்.

**0: 417:** பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அவர்கட்கு என் அன்பின் கைகூப்பு. தங்களின் தென்மொழி சுவடி: 12, ஓலை: 1 இதழின் முகப்பு பாடலும், ஆசிரியவுரையும் மிக அருமை. 'அருட் செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க'' என்று தாங்கள் எழுதியதைக் கண்டு, ஏதேதோ பிதற்றிய எத்தர்களுக்கு இப்பொழு தாவது விளங்கும் என எண்ணுகிறேன். தாங்கள் கலைஞருக்கு வால் பிடிக்கவில்லை; கையூட்டும் பெறவில்லை. தங்களின் நடுவுநிலைக் கொள்கையைத் தென்மொழியன்பர்கள் நன்கறிவர். தாங்கள் மேலும் இதுபோன்று தவறுகள் கண்டவிடத்துச் சுட்டிக்காட்டுவது பலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். என்னைப்பொறுத்த மட்டில் செய்வப் புலவர் வள்ளுவப் பெருந்தகையின் கூற்று, இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரிலானுங்கெடும் இதைத் தென்மொழி மெய்ப்பித்துக் காட்டுகின்றது. எனவே தொடர்க நும தூய தமிழ்ப்பணி! 'வாழ்க பல்லாண்டு' வெல்க-தனித்தமிழ்நாடு

—ந. மகிழரசன், (தங்கவயல்), வெங்காலூர்-8.

**0: 418:** 'தென்மொழி' இதழ் கோவையில் கிடைக்கவில்லை. கீழ்த்தர-கேடுகெட்ட இதழ்களை வாங்கி விற்கும் கடைக்காரன் தென் மொழி போன்ற உயர் தனிச் செந்தமிழ் இதழ்களை வாங்கி விற்க முன் வராதது கண்டு துயரப்படுகிறேன். நம் தமிழினத்தில் இன்னும் தமிழ் வளர்ச்சிப் பணிகள் ஒருமுகமாக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் தமிழில் பேசுபவனுக்கும் எழுதுபவனுக்கும் மதிப்பும், பெருமையும் தரப்படவில்லை. தந்நலத் தமிழர்கள் ஒரு சிலர் பணத்திற்காகத் தமிழர் பண்பாட்டிற்குச் சூளுரைக்கும் செயல்களிலும் ஈடுபடத் துணிந்து விடுகிறார்கள். காலந்தான் விடைசொல்ல வேண்டும். தங்களைப் போன்ற உயர்ந்த-சிறந்த நோக்கத்தோடு பணியாற்று பவர்களே இனித் தமிழினின் எதிர்காலத்தை உறுதி செய்ய வேண்டும். கழக ஆட்சி வந்தும் தமிழ் போதிய உயர்வு நிலை எய்த வில்லை. உண்மைத் தமிழர்கள் உயர்த்தப்படுவதில்லை. மதிக்கப் படுவதில்லை. மேல்நாட்டு நாகரீகக் கவர்ச்சியில் மயங்கித் திரியும் இளைஞர்களைச் சீரிய வழியில் செம்மைப்படுத்தித் தங்களைப் போன்ற கொள்கைப் பிடிப்புள்ளவர்களால்தான் முடியும்.

—சி. மாரியப்பன், கோவை-9.

**0: 419:** தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் வந்தன. மிகமிகக் கடுமையாகத் தாக்கி எழுதுகின்றீர்கள். 'முண்டம்' போன்ற சொற் களைப் பயன்படுத்த வேண்டாம். எல்லாரையும் கவர்ந்து நம் தனித் தமிழ்க் கொள்கையை எங்கணும் பரப்புதல் வேண்டும்.

—இராம. பெரியகருப்பன், சிங்கை-1.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.